விலை ரூபா 5.00


# ஈழநாடு வாரமலர்

மலர் 27 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆனி 4 இதழ் 134

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 18 – 6 – 1995


பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் ஒனநூலகம்

## தமிழர்களை பௌத்தராக மாற்றுவதற்கு முயற்சி!

(கொழும்பு)

தமிழர்களை பௌத்தர்களாக மாற்றும் முயற்சிகள் தலையெடுக்க ஆரம்பித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் தமிழ் சிறுவர்களுக்கு பௌத்த மதத்தைப் போதித்து அவர்களைப் பௌத்தர்களாக மாற்றும் நடவடிக்கையில் பௌத்தபிக்கு ஒருவர் ஈடுபட்டு வருகிறார்.

பௌத்த மதத்தைக் கற்க விரும்பும் தமிழ்ச்சிறுவர்களை சேர்த்துத் தருமாறு இப்பௌத்த பிக்குவின் தமிழ் உதவியாளர் ஒருவர் ரூபவாஹினியின் 'ஆயுபோவன்' நிகழ்ச்சித் தயாரிப்பாளரைக் கேட்டிருக்கிறார்.

[12ம் பக்கம் பார்க்க]

## ஜனாதிபதியின் இம்மாத சம்பளம் பாதுகாப்பு நிதிக்கு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தனது இந்த மாதச் சம்பளத்தை தேசிய பாதுகாப்பு நிதியத்திற்கு வழங்கியுள்ளார்.

படையினரின் சேம நல தேவைகளுக்கு ஜனாதிபதியின் சம்பளம் பயன்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

தேசிய பாதுகாப்பு நிதியத்திற்கு பெருமளவு நிதி சேகரிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. -ரி

## சர்வதேச மத்தியஸ்தம் மிக அரிதாகவே உள்ளது

### அமைச்சர் கதிர்காமர்

(பொன்)

இலங்கை இனப் பிரச்சினைத் தீர்வுக்கு சர்வதேச மத்தியஸ்தம் மிக அரிதாகவே உள்ளதாக வெளியுறவு அமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்காமர் ஜேர்மன் வானொலிக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

ஜேர்மனில் தற்போதுதங்கி நிற்கும் அவர் இது பற்றி மேலும் கூறுகையில்; பயங்கரவாதத்தை ஒழித்துகட்டுவதில் இலங்கைக்கும் ஐரோப்பிய நாடுகளுக்குமிடையில்

(12ம் பக்கம் பார்க்க)



யாழ் நகரில் உள்ள பாடசாலை ஒன்றின் முன்னால் வீதிப் பாதுகாப்பு ஒழுங்குகளை மேற்கொள்ளும் மாணவர்கள். படம்: தேவா

## ★ மட்டக்களப்பு தாண்டியடியில்

# பாரிய ராணுவ அணி ஒன்று மீது விடுதலைப்புலிகள் தாக்குதல்!

## இழப்புகளுடன் படையினர் ஓட்டம்

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு தாண்டியடிப் பகுதியில் முன்னேற்ற நடவடிக்கையில் ஈடுபட்ட பாரிய இராணுவ அணி மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலை அடுத்து படையினர் இழப்புகளுடன் பின்வாங்கிச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.**

மட்டக்களப்பு தாண்டியடியில் நடந்த வியாழக்கிழமை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இராணுவத்திற்கு பலத்த இழப்புகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அன்றையதினம் பகல் 11-15 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டம் கொக்கட்டிச்சோலை இராணுவ முகாமிலிருந்து மணற்திட்டி, காஞ்சிரம்குடா, தாண்டியடி, தெய்வாமுனை ஆகிய பகுதிகளை நோக்கி பாரிய ராணுவ அணியொன்று முன்னேற்ற நடவடிக்கையில் ஈடுபட்டது இவ்வணி தாண்டியடியில் வைத்து விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டது. சுமார் ஒரு மணி நேரம் விடுதலைப் புலிகள் நடத்திய தீரமிகு தாக்குதலை அடுத்து இராணுவத்தினர் பலத்த இழப்புக்களுடன் பின்வாங்கி ஓடி விட்டனர்.

சேதவிபரங்கள் குறித்த சரியான விபரங்கள் இதுவரை கிடைக்கவில்லை

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் ...ட்டன்

[12ம் பக்கம் பார்க்க]

## இக்கட்டான நிலையில் இலங்கை அரசு திணறல்

(லண்டன்)

இலங்கையில் சமாதான முயற்சிகள் முற்றாக குலைந்து விட்டதால் இலங்கை அரசு மிகவும் இக்கட்டானதோர் நிலைக்கு உள்ளாகியிருக்கிறது என்று பி. பி. ஸி தெரிவித்தது.

அரசு தமிழர்களுக்கு ஒரு நியாயமான தீர்வு வழங்க விரும்புகிறது என்பதை எப்படி நிரூபிப்பது என்றும் பி. பி. ஸியில் கேள்வி எழுப்பப்பட்டது.

தமிழ் பகுதிகளுக்கு தன்னாட்சி வழங்கும் திட்டங்களை அரசு தாமதப்படுத்தும் என்பதற்கான அறிகுறிகள் ஏற்கனவே தென்படுகின்றன.

புலிப்படை குண்டுதாரிகளின் அச்சுறுத்தல்களுக்கு எதிர் நடவடிக்கையாக கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் எடுக்கப்பட்டுவரும் கடும் நடவடிக்கைகளினால் அரசு சாதாரண தமிழ் மக்களின் ஆதரவை இழக்கத் தொடங்கியிருக்கிறது என்றும் பி. பி ஸி தெரிவித்தது. ரி- சி

## திரியாய் காட்டில் மீண்டும் மோதல் இரு இராணுவம் பலி; பலர் காயம்

(கொழும்பு)

திருகோணமலையில் திரியாயின் மேற்குப்புற காட்டுப் பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்குமிடையே நேற்றுக் காலை மீண்டும் கடும் மோதல் மூண்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இம்மோதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் இராணுவத் தலைமையகம் தெரிவித்திருக்கிறது.

நேற்று அதிகாலை 2 மணிக்கு தொடங்கிய இம்மோதல்கள் தொடர்ந்து இடம் பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 31ம் திகதி திரியாய்

(12ம் பக்கம் பார்க்க)

சுவையான, சுகாதாரமான,
குழந்தைகளுக்கும், பாதுகாப்பான
ஐஸ்கிறீம் மற்றும் குளிர்பான வகைகளுக்கு

கல்யாணி குளிரகம்
(கல்யாணி கிறீம் ஹவுஸ்)
73, சந்தோசம் மதரு, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

[ஏ–5018]

## வரி விளம்பரம்


**வைத்தியம்**

செங்கண்மாரி (Hepatitis) இரைப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1489)

**[O. L] MATHS**

G. C. E. (O. L)ல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரையும் சித்தியடையாதவர்களுக்கும். ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 28 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும் ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குழி. (சி-1517)

**SPECIAL ANTENNA**

To view Rupavahini, Madras, Programmes Fixing Special T V. Antenna Repairing Antennas, Radios, T V Decks, Clocks and Watches Venus Dilka Watch and Radio Works, 284, Stanley Road [Ariyakulam Junction], Jaffna. Branch: Kandy Road. Chavakachcheri. (A-5003)

**சனிமாற்றமும் வியாழ வக்கிரமும்**

எல்லாராசிப் பலன்களும் ரூபா 10/- எங்கும் விற்பனையாகின்றது. நூலாசிரியர்— சத்யா, கட்டுடை. பாடசாலை உபகரணங்களுக்கு, பாலாஜி புத்தகசாலை, பஸ் நிலையம் யாழ்ப்பாணம், (சி-1523)

**ஆண்டு-5 புலமைப்பரிசில்**

ஆண்டு-5 புலமைப் பரிசில் 95 பரீட்சைக்காக புதிய பாடத்திட்டப்படி பயிற்சி வினாத்தாள்கள் (விடைகளுடன்) ஒவ்வொரு மாதத்தின 2ஆவது, 4ஆவது ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்படுகின்றன அடுத்த வெளியீடு 25-6-95 பயிற்சி வினாத்தாள்களையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**BOND**
58 A. ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்
(சி-5016)


## சஞ்சிகை வெளியீடு

(வேலணை)

யாழ்ப்பாண பல்கலைக்கழக சமுதாய மருத்துவத் துறையினர் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் உதவியுடன் ''சுகமஞ்சரி'' என்ற சமூக சுகாதார சேவையாளர்களுக்கான காலாண்டு சஞ்சிகை ஒன்றை வெளியிட்டுள்ளனர்

## எக்ஸ்றே பிலிம்களுக்கு தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் எக்ஸ்றே பிலிம்களுக்கு தட்டுப்பாடு நிலவும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் எக்ஸ்றே பிலிம்கள் தற்போது மிக குறைந்த அளவே கையிருப்பில் உள்ளன.

இதனை அடுத்து வைத்தியசாலையில் எக்ஸ்றே எடுக்கும் நோயாளர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. -170-ரி

## திருவுருவப் படம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

கப்டன் சத்தியாவின் திருவுருவப்படம் உடுப்பிட்டி இமையாணியில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. -ரி

## 'சமுர்த்தி' விழாவில் தமிழ் மொழி புறக்கணிப்பு

(கொழும்பு)

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் நடைபெற்ற 'சமுர்த்தி' அச்குரார்ப்பண விழாவில் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளது


விழா நிகழ்ச்சிகள் எதுவும் தமிழ்மொழியில் அறிவிக்கப்படவில்லை. விநியோகிக்கப்பட்ட நிகழ்ச்சிக்குறிப்புக்களும் சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மட்டுமேயிருந்தன. மேடையின் பின்புறத் திரையில் எழுதப்பட்டிருந்த தமிழ் வாசகம்கூட பிழையாக எழுதப்பட்டிருந்தது.

இதுகுறித்து இவ்விழாவில் கலந்துகொண்ட தமிழ் எம். பிக்களினால் இளைஞர் அபிவிருத்தி விவகார அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. (கி-சி)


உ

## பாராட்டு விழாவும் பட்டம் வழங்கலும்

கொழும்புத்துறை — நெடுங்குளம்
அம்பலவாண விநாயகர் ஆலயத்தில்
மணவாளக்கோல உற்சவ
தினங்களில்
★ கணபதி கடாட்சம் ★
தொடர் வாக்குத்தானம் வழங்கும்
சமூக சமயக் கல்வித் தொண்டர்



திரு. கார்த்திகேசு கணேசதாசன்
[ இளைப்பாறிய அதிபர், கொழும்புத்துறை இ. ம. வி: ]
அவர்களுக்கு
21 - 06 - 95 புதன்கிழமை
காலை 11 மணிக்கு
★ சமூகசோதி ★
என்னும் பட்டம் வழங்கி
ஆலயத்தில் கௌரவிக்கப்படவுள்ளது.
★ நிகழ்ச்சிகள் ★

தேவாரம் :
திரு. து கமலநாதன்
மங்கள விளக்கேற்றல் :
திருமதி தெ. செந்தில்குமரன், திரு. ஜெ. முத்துக்குமாரசுவாமி, திருமதி ஜெ. நடேசகாந்தன், திரு. சி. ஆனந்தசுந்தரம்
வரவேற்புரை :
திரு. சி. வைத்தியநாதன்
தலைமையுரை :
திருமதி சி. வைத்தியநாதன்
ஆசியுரை :
திரு. பொ. சிவப்பிரகாசம்
[ தலைவர், கொழும்புத்துறை இ. இ. ம. ]
பாராட்டுரை :
திரு. செ. இராசரத்தினம். திரு. க. செந்தில்குமரன்
கதராடை போர்த்தல்:
திரு. அ. இராசையா
[ ஓய்வுபெற்ற காவல்துறை அதிகாரி ]
சமூகசோதி என பட்டமளித்து
பாமாலை வழங்குபவர் :
திரு. இ. பரராசசிங்கம்
பதிலுரை : சமூகசோதி கா. கணேசதாசன்
நன்றியுரை : திரு. அ. சா. ம. நாயகம்
★ காலை விசேட சங்காபிஷேகமும், ஆராதனையும், பகல் மகேஸ்வர பூசையும் நடைபெறவுள்ளது.
✶ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ✶
ஆலய பரிபாலன சபை உபயகாரர்கள்.
நெடுங்குளம், கொழும்புத்துறை.

வாழ்த்துபவர் :
எஸ். ரி. மெடிக்கல்ஸ்
490, கேணல் கிட்டுசாலை, ( ஆஸ்பத்திரி வீதி )
யாழ்ப்பாணம். (ஏ-5014)


விஜேயை கொன்றவரை

## ரயர்போட்டு எரித்த பொலிஸ் அதிகாரிகளுக்குபதவிஉயர்வு

(கொழும்பு)

விஜயகுமாரணதுங்கவை கொலை செய்ததாக ஒப்புதல் வாக்குமூலமளித்த லயனல் என்ற சந்தேகநபரைச் சுட்டுக் கொன்று ரயர்போட்டு எரித்த பொலிஸ் அதிகாரிகளுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டதாக இதுபற்றிய விசாரணையை நடாத்தும் விசேட ஆணைக்குழு முன் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது கொழும்பு மோசடிப் பிரிவின் பொறுப்பாளராக இருக்கும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜயசூரிய ஆணைக்குழுமுன் சாட்சியமளிக்கையில் இத்தவலை தெரிவித்தார்.

தற்பொழுது வவுனியா பொலிஸ்நிலையத்தில் ஆன்ஸ்பெக்டராக இருக்கும் பியசேன சாட்சியமளிக்கையில்; கொலைச் சந்தேகநபரான லயனலை 1989ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28ம் திகதி இரவு பொலிஸ் கோஷ்டி ஒன்று 4ம் மாடியிலிருந்து அழைத்துச் சென்றதை தான் கண்டதாகவும் பின்னர் அவர் ஹேமாகம பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்டு ரயர் போட்டு எரிக்கப்பட்டதாக அறிந்ததாகவும் தெரிவித்தார். (கி-சி)

## இன்று

(யாழ்ப்பாணம்)

அரியாலை சனசமூக நிலையத்தின் 46வது ஆண்டு நிறைவு விழா இன்று ஞாயிறு பி. ப 2 மணிக்கு ஆரம்பமாகிறது. இல்லமெய்வல்லுநர் போட்டிகளும் இரவு கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். விழாவின் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உதைபந்தாட்ட பயிற்றுனர் திரு. எஸ். கிளிபேட் அன்ரனிப்பிள்ளை கலந்துகொள்வார்.


1995 / 96 காலபோக
விதை உருளைக்கிழங்கு
பெறுவதற்கான
**விண்ணப்பம்**

1995 / 96 காலபோகத்தில்
இறக்குமதி செய்யப்படவுள்ள
விதை உருளைக்கிழங்கு

சென்ற ஆண்டைவிட அரை மடங்காக குறைக்கப்படவுள்ளதால் கிழங்கு பயிரிட உள்ள விவசாயிகள் தமக்கு தேவையான விதை உருளைக் கிழங்கினை பெற்றுக் கொள்வதற்கு இலகுவாக அதற்குரிய விண்ணப்பப்படிவங்களை தங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள
பசுமை வேளாண் சேவை நிலையங்களில்
பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும்
15 - 07 - 95ற்கு முன்னர்
ஒப்படைக்குமாறு
கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**மத்திய வேளாண் நலச் சேவைகள்**
விவசாயப் பகுதி
த. பொ. மே. நிறுவனம்
தமிழீழம்.

குறிப்பு :
★ உருளைக்கிழங்கு பயிரிடும் விவசாயிகளின் நலன் கருதி தனிப்பட்ட முறையில் வடபகுதிக்கு வெளியில் இருந்து விதை உருளைக்கிழங்கு கொண்டுவரப்பட்டு நடுகை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. இதனை மீறும் விவசாயிகள்மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (ஏ-5013)

யாழ்ப்பாணம் நல்லூர் இளைநூலகம்.

# இரணவில - லக்ஷ்மன் - தமிழ் அலை

நாட்டில் நடக்கும் தற்போதைய சூழ்நிலைகளை கருத்தில்கொண்டு அரசாங்கத்தின் கூட்டுப்பொறுப்புக்கு பங்கம் விளைவிக்காதவாறு நடந்து

## வாரசாரம்

கொள்ளுமாறு அரசாங்கத் தரப்பு உறுப்பினர்களை திருமதி சந்திரிகா குமாரணதுங்கா வேண்டிக்கொண்டுள்ளார்.

### இரணவில விவகாரம்

அரசாங்கக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் திரு. பற்றி வீரக்கோனின் தனிநபர் மசோதா, அதாவது இரணவிலவிலுள்ள ''வொய்ஸ் ஒப் அமெரிக்கா'' ஒப்பந்தத்துக்கு எதிராக அவர் சமர்ப்பித்த மசோதா பற்றிய விவகாரமும் சூடுபிடித்த நிலையில் நடைபெற்றது. சந்திரிகா ஏன் அம்மசோதா வாக்குக்கு விடப்படும்போது சில் அங்கத்தவர்கள் சமுகமளிக்கவில்லை என்றும், மற்றவர்கள் அதை



ஏன் எதிர்த்து அரசாங்க தரப்பில் கதைக்கவில்லை என்றும் கேட்டார். அதற்கு சில உறுப்பினர்கள் தம் மனச்சாட்சி இடம்கொடுக்கவில்லை என்று கூறினர். மற்றவர்கள் மழுப்பல் கதை பேசினர். அவ்வேளையில் சந்திரிகா தங்களது பொதுசன ஐக்கிய முன்னணிதான் இரணவில வொய்ஸ் ஒப் அமெரிக்கா திட்டத்துககு முதவில் முழுமூச்சாக முன்னணியில் நின்று எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் என்பதை ஒத்துக்கொண்ட போதும் இன்றைய சூழ்நிலையில் சில விட்டுக்கொடுப்புகளைச் செய்யவேண்டியுள்ளது என்று கூறினார்.

### கதிர்காமரின் அறியாமை

இன்று சந்திரிகா அரசாங்கத்தை ஒரு தீவிர சிங்கள அமைச்சிலும் பார்க்க கூடுதலாக தாங்கிப் பிடிப்பதும் வக்கலாத்து வாங்குவதும் தமிழர் என்று சொல்லப்படும் லக்ஷ்மன் கதிர்காமராகும். தமிழ் பேசத்தெரியாத, தமிழர்களின் பிரச்னை என்ன என்பதை நேரடியாக அனுபவம் மூலமாக 1994-ம் ஆண்டு வரை தெரிந்திராத கதிர்காமர் தனது கல்வியின் மூலமும் சட்டத்துறை விவேகத்தின் மூலமும் சந்திரிகாவின் அரசாங்கம் தமிழர்கள் பிரச்னையில் அதாவது வடக்கு-கிழக்கு பிரச்னையில் கைக்கொண்ட, கைக்கொள்ளும் நடவக்டிககளெல்லாம் சரியென்ற வகையில் உலகிற்கு வெளிக்காட்டப்பார்க்கிறார், அண்மையில் அவர் பி. பி. ஸிக்கு கொடுத்த பேட்டியில் அவர் வழங்கிய மறுமொழிகள் அவருக்கு தமிழர்களின் பிரச்னைகள் விளங்கவில்லையென்பதையும் ஏதோ தன் வாதத் திறமையால் தம் கூற்றுக்களை சரியாக முயற்சிக்கிறார் என்பது தெளிவாகத் தெரிந்தது.

### எழுச்சி ஊர்வலங்கள்

உலக நாடுகளில் சிறிலங்கா அரசின் பொய்ப்பிரசாரங்களை மக்களுடைய ஆதரவோடு முறியடிக்கும் நோக்கத்தோடு ஊர்வலங்கள் மக்களுடைய எழுச்சி ஊர்வலங்களாக நடைபெறுகின்றன. இவற்றில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் வயது, பால் வேறுபாடின்றி பங்குபற்றியுள்ளார்கள். இது பற்றி தமிழீழ விடுதலைப் புலிகளைச் சேர்ந்த திரு. லோறன்ஸ் பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் தாயக விடுதலைக்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெறும் நோக்குடனும் சிறிலங்கா அரசு நிறையப் பொய்ப்பிரசாரங்களைச் செய்து பல்வேறு அரசாங்கங்களை நம்பவைத்து இனப்படுகொலை யுத்தத்தைநடத்துவதை அம்பலப்படுத்தும்வகையிலும் இவ்வெழுச்சி ஊர்வலங்கள் நடைபெறுகின்றன என்று கூறியுள்ளார்.

### ஜேர்மனி உதவி

இந்தவகையில்தான் இலங்கைக்கு இராணுவ, பொருளாதார உதவிகள் வழங்கும் நடவடிக்கைகளை ஆராய மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஜேர்மன் உயர்மட்டத் தூதுக்குழு சிறிலங்காவுக்கு வந்துள்ளது. சமீபத்தில் ஜேர்மன் சென்ற லக்ஷ்மன் கதிர்காமரின் வேண்டுகோளை அடுத்தே இத்தூதுக் குழுவினர் வந்துள்ளனர். சிறிலங்கா சார்பில் வேண்டுகோளை விடுத்தவர் பெயரளவில் தமிழராகவிருந்துபொய்ப் பிரசாரத்துக்கு மேலும் வலுச் சேர்த்துள்ளதை இதிலிருந்து கண்டுகொள்ளலாம்.



### தமிழ் அலை

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா இராணுவ ரீதியாக தலையிடுவதற்கு எதிராக மக்கள் அபிப்பிராயத்தை திரட்டும் பொருட்டும் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும் கடந்த வாரம் சென்னையில் மாபெரும் கூட்டம் ஒன்று நடைபெற்றது. தடைகளை மீறி பெருந்தொகையான மக்கள் அக்கூட்டத்தில் பங்குபற்றினர். கூட்டத்தில் தலைவர் பிரபாகரனைப் புகழ்ந்து பாராட்டியும் எமது விடுதலைப்போருக்கு ஆதரவு வழங்கியும் வீரமணி, நெடுமாறன் போன்ற தலைவர்கள் உரையாற்றினார்கள், காங்கிரஸ் கட்சியின் எஸ். ஆர். பாலசுப்பிரமணியத்துக்கு இது பொறுக்கவில்லை. விடுதலைப் புலிகள் தமிழ்நாட்டுக்குள் ஊடுருவிவிட்டனர், அவர்கள் சுப்பிரமணியசுவாமி போன்றோரைக் கொலை செய்துவிடுவர், பல சதிகளில் ஈடுபடுவர் என்றெல்லாம் பேசி கூட்டத்தில் பேசியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூச்சலிடுவதிலிருந்தே கூட்டத்தின் தாக்கம் தெரியவருகிறது. தமிழ்நாட்டில் பரவலாக பல இடங்களிலும் கூட்டங்கள் நடைபெறப் போகின்றன என்றும் செய்திகள் வந்துள்ளது. உண்மையை வெகுகாலம் ஒளித்துவைக்க முடியாது. தமிழக மக்களை நெடுகலும் ஏமாற்றமுடியாது. அலை எம்பக்கம் வீசத்தான் போகிறது.

**ச. தியாகராசா**

---

நமது நோக்கு

## மனித உரிமை

தமிழர்களெல்லாம் பயங்கரவாதிகள் அவர்களைப் போர்மூலம் வெற்றிகொள்ளவேண்டும் என்று சிங்களவர்களை ஏமாற்றிக் கொண்டும், சமாதானத்துக்கு புலிகள் முட்டுக்கட்டையாக இருக்கிறார்கள் நான் பேச்சுவார்த்தைக்கு தயார் என்று தமிழர்களை ஏமாற்றப் பார்த்துக்கொண்டும் இருக்கும் ஜனாதிபதி சந்திரிகா மனித உரிமைகள் பிரச்சினைகள் மீது உலகத்தையே ஏமாற்றப் பார்க்கிறார்.

அவசரகாலச் சட்டத்தின்கீழ் கைதாகுபவர்களின் அடிப்படை உரிமைகளைக் கவனிக்க ''மனித உரிமைகள் செயலணிக்குழு'' என்ற அமைப்பை உருவாக்குவேன் என்று ஜனாதிபதி உறுதி அளித்திருந்தபோதும் அத்தகைய குழு இன்னமும் உருவாக்கப்படவில்லை. ஆனால் உலகுக்கு தான் மனித உரிமை பற்றி அக்கறை கொண்டவர் என்ற போலித் தோற்றத்தை உருவாக்குவதற்காக கடந்த வியாழன் அன்று சந்திரிகா இராணுவத்தினரை மனித உரிமை செயலணி குழுவுடன் ஒத்துழைக்கும்படி கேட்டிருந்தார். அவ்வித குழு ஒன்று உருவாக்கப்படாதநிலையில் இராணுவத்தினர் எதனுடன் ஒத்துழைப்பது? இது பட்டவர்த்தனமாக உலக நாடுகளை ஏமாற்றும் ஒரு வித்தை.

உண்மையில் நடப்பதென்ன? கிழக்கில் விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க முடியாத நிலையில் இராணுவத்தினர் அப்பாவிப் பொதுமக்களை கேடயமாகப் பாவிக்கிறார்கள். பொதுமக்களை தேவையின்றித் தாக்குகிறார்கள்.

பி பி. சி.யின் தகவல்கள்படி கிழக்கில் இரண்டாயிரம் பொதுமக்கள் படையினர்களால் கைதுசெய்யப்பட்டிடுள்ளனர். இவர்களில் ஒருசிலரே விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கு மேலாக மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் கால் இழந்து, காயப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் சில பெண்களின் கூற்றுப்படி இராணுவத்தினர் கண்ணிவெடிகளைப் பரீட்சிப்பதற்காக தங்களை பலவந்தமாக பாவித்த வேளைகளில்தான் தங்களுக்கு காயங்கள் ஏற்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

இந்த வகையில்தான் சந்திரிகா அம்மையாரின் ஆட்சியில் மனித உரிமைகள் பேணப்படுகிறது. எவ்வளவு காலம்தான் அவர் உலகை ஏமாற்றப் போகிறாரோ?

---

## சர்வதேச செய்திகள்

★ 4½ லட்சம்ஈரான்இராணுவம் அண்மையில் பெரும் எடுப்பில் ஒத்திகை ஒன்றை நடாத்தியுள்ளது. அமெரிக்கா, மற்றும் இஸ்லாமிய நாடுகளுக்கு எதிராக இயங்கும் நாடுகளை எச்சரிப்பதே இந்த ஒத்திகையின் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


★ காஷ்மீரில் உள்ள சிறைச்சாலையை பார்வையிடுவதற்கு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு இந்தியா அனுமதிவழங்கியுள்ளது. இந்தியா அடிக்கடி மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருகின்றது என பல உலக நாடுகள் குற்றம் சாட்டிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

★ சீனா, அமெரிக்காவில் உள்ள தூதுவராலயத்தை மூடும் முயற்சியில் இறங்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. அண்மைக்

(11ம் பக்கம் பார்க்க)

---

## மிஸ்டர் அன்ட் மிஸிஸ் டாமோடரன்



மிஸிஸ் டா: சிப்பாய் என்றால் என்ன மீனிங் டார்லிங்

மிஸ்டர் டா: நீங்க பிறந்தது யாப்பனே நீங்களுக்குத் தெரியாது .. வட் ஏஷேம். சிப்பாய் என்றால் மானிப்பாய், கோப்பாய் போல ஒரு ஊர்.

மிஸிஸ் டா: தாங்கியூ டார்லிங்

மிஸ்டர் டா: ஓ...... டோன்ற் மென்சன்.

சிரித்திரன் சுந்தர்

---

# ஈராக் - இஸ்ரேல் - இலங்கை

இன்று ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசேயின் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல எதிர்ப்பாளர்கள் மத்தியில் ஈராக் அரசை வழிநடத்த வேண்டிய நிலையில் இருக்கிறார். கடந்த வாரம் கூட இராணுவ அதிகாரிகளினால் சதாம் ஹுசேயினுக்கு எதிராக சதிப் புரட்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டு முறியடிக்கப்பட்டது.

இதன் பின்னணியில் இஸ்ரேல் அமெரிக்கா போன்ற நாடுகள் இருப்பதாகவும், இஸ்ரவேல் தான் ஈராக்கின் பரம வைரியாக உள்ளது என்றும் தெரிவித்துள்ளது. வளைகுடா போரில் இஸ்ரேல் ஈராக்குக்கு எதிராக எப்படி இயங்கியது போன்ற சம்பவங்



கள் சதாம் ஹுசேனின் மனத்தடத்திலிருந்து இன்றும் அழியாத நிலையில்உள்ளது என்பதை அவர் அண்மையில் வெளியிட்ட கருத்துக்களில் இருந்தும் புலப்படுகிறது.

அண்மையில் பாக்தாத் பத்திரிகை ஒன்றில் சதாம் ஹுசேன் 'இஸ்ரேலை முற்றாக அழிக்கப்போவதாகவும் அதன் பின்னால் உலகு எங்குமுள்ள யூத சமுதாயத்தை ஒன்றின் பின் ஒன்றாக ஒழித்துக்கட்டப்போவதாகவும் சூளுரைத்துள்ளார்.

இதை உறுதி செய்வது போன்று ஜனாதிபதி சதாம் ஹுசேயின் மூத்த மகன் அபூஸர்கான் 'யூதர்களின் பரம்பரையே இல்லாதொழிக்க ஒரு புதிய தலைமுறையை ஈராக்கிய ஜனாதிபதி உருவாக்கி வருகின்றார் என்று குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேலர்கள் உலக அரங்கில் சில நாடுகளுக்கு உதவுவது போன்று, நியாயமான கோரிக்கைகளையும், போராட்டங்களையும் முன் எடுத்துச் செல்லும் அமைப்புக்களுக்கு எதிரான செயல்களில் இறங்கி வருகின்றது என்று அரபுலக மத்தியில் ஒரு அபிப்பிராயம் நிலவி வருகிறதை இங்கு குறிப்பிடாமல் இருக்கமுடியாது.

இலங்கையில்கூட யுத்தத்தைச் சாட்டாக வைத்து மூடி வைத்துள்ள இராஜதந்திர உறவுகளை மீண்டும் புதிப்பித்து இஸ்ரேல் காலடி எடுத்து வைக்க முனைகிறது. இலங்கைக்கு இராணுவ ஒத்துழைப்புக் கொடுப்பதில் உலக நாடுகளில் முன்னணியில் நிற்கும் நாடாக இன்று இஸ்ரேல் விளங்குகின்றது.

(11ம் பக்கம் பார்க்க)

[4]

# தீவுகளின் இராஜகுமாரி எப்படி

# இந்து சமுத்திரத்தின் பிச்சைக்காரியானாள்

## தமிழ் மண்ணில் சில தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டமைக்கான தந்திரமென்ன?

மு. திருநாவுக்கரசு

தமிழரின் தாயகமாகிய தமிழ்மண்ணில் சிங்கள அரசு மூன்று முக்கிய தொழிற்சாலைகளை ஸ்தாபிப்பதில் ஈடுபட்டது காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயன தொழிற்சாலை, வாழைச்சேனை காகிதத்தொழிற்சாலை என்பவையே அவை. இவை தமிழ் மக்களுக்கு அளிக்கப்பட்ட பெரும் கொடைகளாகவே கூறப்பட்டன. உண்மையில் இவற்றின் இராஜதந்திர இலக்கு வேறாயிருந்தது.

மேற்படி தொழிற்சாலைகள் சம்பந்தமாக இடது சாரிகளைப் பற்றியும் தமிழர்களைப்பற்றியும் வரையறுக்கப்பட்ட தெளிவான இலக்குகளுடனேயே அரசு செயற்பட்டுளளது.

இத்தொழிற்சாலைகள் தமிழ் மண்ணில் ஸ்தாபிக்கப்படுவதால் அவை சிங்கள இடது சாரிகளைபலப் படுத்துமென்ற வர்க்க ரீதியான அச்சம் எழ முடியாதிருந்தன. தமிழ் மண்ணில் இடது சாரிகளல்லாத தலைமைத்துவம் வேரூன்றியிருந்ததை அரசு அவதானித்திருந்தது. அத்துடன் தமிழ் சிங்கள இன முரண்பாடு இதற்கான வாய்ப்பை இல்லாது செய்து விடும் என்ற நம்பிக்கையும் இருந்தது. மேலும் முழுச்சனத் தொகையுடன் ஒப்பிடுகையில் இவை சிறியவை எனவே தமிழ்மண்ணில் அமைக்கப்படக் கூடிய தொழிற்சாலைகளினால் வர்க்க ரீதியான ஆபத்து ஆட்சியாளருக்கு ஏற்பட முடியாது என்ற உறுதியான மதிப்பீட்டுடனேயே இதனை அவர்கள் மேற்கொண்டனர்.

அதே வேளை தமிழ் மண்ணில் தொழிற்சாலை வளர வேண்டுமென்ற பேரவாவினாலோ தமிழ் மக்களுக்கு நன்மை பயக்க வேண்டும் என்ற எண்ணத்துடனோ இவை ஆக்கப்படவில்லை மேலும் தமிழ் மக்களுக்கு பாதகமாகவும் சிங்கள அரசுக்கு சாதகமாகவும் பல அம்சங்கள் இவற்றில் காணப்பட்டன.

தமிழ் மக்கள் இத்தொழிற்சாலைகளை ஒரு வரப்பிரசாதமாக எண்ணும் எண்ணப்பாங்கு வளர்க்கப் பட்டுள்ளமையானது தமிழ் மக்கள் பக்கமிருந்து இதற்கான அரசியல உள்ளூர நோக்கப் படாமையே காரணமாகும்.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை தமிழ்மண்ணிற்கே உரிய சிறப்பான மூலவளமாகிய சுண்ணக் கல்லை சிங்கள அரசு கறந்தெடுக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டதாகும். சுண்ணக்கல் ஒரு முடிவு பொருள். அதனை கறந்தெடுத்து சிங்கள அரசு தனது நிர்மாணவேலைக்கு பயன்படுத்தியது. சிங்களப்பகுதியிலுள்ள கட்டிடங்கள் நகர நிர்மாணிப்பு அணைக்கட்டுகள் ஆகிய அனைத்திற்கும் காங்கேசன் சீமெந்து ஒரு அடிப்படை வளமாகியது: இன்று நிமிர்ந்து நிற்கும் சிங்கள கட்டிடங்கள் தமிழ் மண்ணில் சுரண்டப்பட்ட சுண்ணக்கல்லினால் ஆனவை விவசாயம், தீர்ப்பாசனம் மற்றும் ஏனைய அணைகட்டுகள் என்பனவற்றால் சிங்களப் பகுதி வளம் பெறுவவற்கும் வாழ்வதற்கும் தமிழ் மண்ணின் அடிப்படை வளம பிரதியீடு செய்யப்படாது சுரண்டப்பட்டது.

காங்கேசன் துறையில் அகழப்பட்ட சுண்ணக்கற்களால் உருவான பெரும் குழிகளை நிரவும் முயற்சியில் அரசு ஈடுபடவில்லை இவை மண்வளத்தையும் நீர்வளத்தையும் பாதிக்கக் கூடியவை தமிழ் மண்ணின் மண்வளமும், நீர் வளமும் பாதிக்கப்படுவதைப் பற்றி சிங்கள அரசுக்கு சிறிதும் கவலையில்லை மேலும் இத்தொழிற்சாலையினால் உருவாகக் கூடிய சுற்றுச் சூழல் மாசு படுதல் பற்றி அரசு சிறிதும் கவலைப்படவில்லை. அதற்கான எத்தகைய தடை நடவடிக்கையிலும் அரசு ஈடுபட்டிருக்கவில்லை ஒருபுறம் இத் தொழிற்சாலையானது சிங்கள நிர்மாணத்திற்கு அத்திவாரமானது-மறுபுறம் தமிழ் மண்ணின் மூல வளத்தை சுரண்டவும் மக்களின் வாழ்வை பாதிக்கவும் வளத்தை மாசுபடுத்தவும் இவை ஏதுவாயின?

பரந்தன் இரசாயன தொழிற்சாலைகளிலும் இத்தகைய நோக்கமிருந்ததை அவதானிக்கலாம் அதை அண்டிய உப்பளங்களிலும் இரசாயன தயாரிப்புக்களாலும் பாதிப்புக்களே தமிழ்மண்ணில் மிஞ்சின ஆனால் அவற்றின் நலனகள் சிங்களப் பகுதிக்கு சென்றன. மண்ணையும் வளத்தையும் சூழலையும் பாதிக்கக் கூடிய வகையில் தொழிற்சாலைகளை அமைத்த சிங்கள அரசு இவற்றிக்கான மாற்று வழிகள் பற்றி சிந்தித்திருக்கவில்லை: மேற்படி தொழிற்சாலைகளால் தமிழருக்கு வேலை வாய்ப்புகள் கிடைத்தன' ஆனால் இவற்றை விட அதன் தீமைகளும் கெட்ட நோக்கங்களும் பெரிதாகும்.

வாழைச்சேனை காகித தொழிற்சாலையைப் பொறுத்து மேற்படி இரண்டையும் ஒத்த தீயவிளைவுகள் தமிழ் மண்ணில் இல்லையாயினும் தீவளாவிய ரீதியில் காகித தேவையை பூர்த்தி செய்வதற்கு ஏற்ப மலிவான வளம் இச் சூழலில் காணப்பட்டமையால் அதனை பயன்படுத்துவது அரசுக்குப் புத்திசாலித்தனமாய்பட்டது. இதுவும் தமிழ் மக்களுக்காக உருவாக்கப்பட்ட தொழிற்சாலையல்ல,

எனவே மேற்படி தமிழ் மண்ணில் உருவாக்கப்பட்ட இத் தொழிற்சாலைகளில் இடது சாரிகள் வளர வாய்ப்பின்மை காணப் பட்டமையினாலும் தமிழ் மண்ணில் வளங்களைச் சுரண்ட வாய்ப்புக் காணப் பட்டமையாலும் தமிழ் மக்களுக்கு கிடைக்கக்கூடிய நன்மைகளை விட தீய அம்சங்கள் முதன்மை பெற்றிருந்தமையாலும் இறுதியில் சிங்கள ஆட்சியாளருக்கு இவை இலாபமாக அமைந்ததாலும் இவற்றை உருவாக்கினர்-

எனவே மேற்படி தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் வர்க்க ரீதியாக இவற்றுக்கிருந்த விதிவிலக்குத் தன்மையினையும், இன நோக்கில் இவற்றுக்கிருந்த கெட்ட உள் நோக்கத்தினையும், அரசாங்கத்திற்கு இவற்றால் ஏற்பட முடிந்த இலாபதனையும் கருத்திற்கொண்டு இவற்றை வேறுபடுத்தி நோக்கவேண்டும்.

மேற்படி நிலைமை இவ்வாறிருப்பினும் தீவடங்கிய ரீதியில் கைத்தொழில் அபிவிருத்தி மிகவும் பின்தங்கியேயிருந்தது சுதந்திரத்திற்குப் பிற்பட்ட கால கைத்தொழிலை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். இதன் முதலாவது கட்டம் 1948—60 வரையானது. இக்காலம் பிரதானமான இறக்குமதியில் மட்டும் தங்கியிருந்த காலமாகும்.

1948ம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஆறுண்டுத் திட்டமானது குடியானவர் விவசாயத்துக்கே முக்கியத்துவம்கொடுத்தது. இத்திட்டதிற்கென ஒதுக்கப்பட்ட 1359 மில்லியன் ரூபாயை பின்வருமாறு துறை சார் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டன.

விவசாயம் 503 மில்லியன் 37 வீதம்.

சமூகசேவை 375 மில்லியன் 28 வீதம்.

பொதுச்சேவைகள் 297 மில்லியன் 22 வீதம்.

கைத்தொழிலும் சக்தியும் 184 மில்லியன் 13 வீதம்.

கைத்தொழிலுக்கும் சக்திக்கும் சேர்த்து 13 % மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்ததை இங்கு காணலாம்

1954ஆம் ஆண்டு உலகவங்கியின் 6 ஆண்டு முதலீட்டுத்திட்ட அறிக்கைப்படி 1600மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. இதில், விவசாயம் 36 %. சமூகசேவை 16 %, பொதுசேவை 35%, கைத்தொழிலும் சக்தியும் 13%:

கைத்தொழில்பற்றிய புள்ளி விபரபட்டியல் ஒன்று இங்கு தவிர்க்கட்டுளளது.

---

### ஐயம்

புத்தர் தோன்றிய
புனித பூமியில்
அவர்
மீண்டும் இங்கு வந்தால்
தேவைப்படுவது
அடையாள அட்டை.

கி. சதாசிவம்
மட்டுவில்.

---

# 20,000 அமெரிக்கபடைகளையும் ஏப்பமிட்ட வியட்னும் யுத்தம்

1975-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ம் திகதி ஜனதிபதி தியூ இராஜனமா செய்தார்; நாங்கள் எல்லா இடங்களிலும் பலத்த தாக்குதல் தொடுத்துள்ளோம்என்று வடவியட்நாமின் ஆணையிடும் அதிகாரியான வன்கயின் கியப் அன்று கூறினர்.

அன்றைய தினம் இரவு சைகோன் நகரத்திலிருந்து 120 கிலோ மீட்டர் தூரத்திலிருந்த வட வியட்நாமின் இராணுவத் தலைமையகத்திலிருந்து ஜெனரல் வான் லியன் டன்க தலைமையில் படை அணி ஒன்று சைகோன் நகரத்தை நோக்கி படையை நகர்த்தியது.

இதேவேளை வியட்நாம் யுத்தத்தில் தென் வியட்நாமின தோல்வியை அமெரிக்காவில உள்ள டவல் மாளிகையில் அதிகாரிகள் ஒன்றுகூடி ஆராய்ந்தனர். அமெரிக்க இராஜாங்க அமைச்சின் செயலாளர் கிசிங்கரும், ஜனதிபதி ஜெரால்ட்டும் சந்தித்துக் கொண்டார்கள்; இந்தவேளையில் அமெரிக்க இராஜாங்க அமைச்சின் செயலாளரான கிசிங்கரிடம் அமெரிக்க ஜனதிபதி போட் பின்வருமாறு கூறினர்.

எவராலும் இந்தயுத்தத்தை இலகுவாக நிறுத்தமுடியாது. கம்யூனிஸ்ட் துருப்புகளின் இராணுவ நடவடிக்கைகளால் சைகோன் நகரத்துக்கு பெரும் அழிவு ஏற்பட்டுள்ளது.''

இந்த நேரகதில் காலை 10-51க்கு ஜனதிபதி லீமென் தேசிய பாதுகாப்புச் சபையைக் கூட்டினர். இந்தவேளையில் தென் சீனக் கடலில் நங்கூரமிட்டிருந்த அமெரிக்க விசேட படையும் சைகோன் நகரத்துக்கு நகர்ந்தது.

ஏப்ரல 29ம் திகதி தென் வியட்நாமை வடவியட்நாமில் உள்ள கம்யூனிஸ்ட் துருப்புகளின் கீழ் வருவதற்குரிய அறிகுறிகள் தென்பட்டன. இந்த வேளையில் அமெரிக்கத் தூதுவராலயத்தில் உள்ள தூதுவராலய அதிகாரிகளை பாதுகாககும்பொருட்டு, அவர்களை ஏற்றுவதற்கு அமெரிக்காவின் ஹெலிகப்டர் ஒன்று வியட்நாமில் உள்ள தூதுவராலயத்துக்கு முன்பு நிறுத்தப்பட்டது. வடக்குவியட்நாமிலுள்ள ஆணையிடும் அதிகாரியானரள் வான்று சைகோன் நகரத்துக்கான இறுதித் தாக்குதல் மேற்கொள்வதற்கு ஆயத்தமானர்.

எங்கள் ஒரே குறிக்கோள் சைகோன் நகரத்தைப் பிடிப்பது. மக்களை மரணத்திலிருந்து காப்பாற்றமுனைவோம். எங்களுக்கு அவசியமானது சைகோன் நகரத்தை எங்களுக்குக் கீழ் கொண்டுவருவது தான்'' என்றும் குறிப்பிடுகிறார்.

ஏப்ரல் 30ம் திகதி வடவியட்நாம்படைகள்சைகோன் நகரத்தை தமக்குக் கீழ்கொண்டுவந்தார்கள். அமெரிக்க ஜனதிபதி அமெரிக்கப் படைகளை விலகுமாறு கட்டளை பிறப்பித்தார் இதனல் வியட்நாமிலுள்ள அமெரிக்க வியட்நாம் படைகள் பின்வாங்கியது மட்டுமல்லாமல் பல படையினர் சிறைக் கைதியாகப் பிடிக்கப்பட்டனர்.

வடவியட்நாமிலுள்ள இராணுவ அதிகாரி மேஜர் னக்யூஅன் வான்குவா 843 இலக்கம் கொண்ட சோவியத் தேசத்தில் செய்யப்பட்ட 54 ரக யுத்த டாங்கியின் மேல் ஏறினர். தனது டாங்கியை சைகோன் நகரத்திலிருந்து ஜனதிபதி மாளிகையை நோக்கிச் சென்றார். அவருடன் மேலும் 6 யுத்த டாங்கிகள் தின்கி பாலத்துக்கு அருகில் தென் வியட்நாமுக்குச் சொந்தமான T 41 இரண்டு தென் வியட்நாம் டாங்கிகள்மீது தாக்குதல் தொடுத்து டாங்கிகளைச் சேதமாக்கியபின் ஜனதிபதி மாளிகைக்குள் டாங்கிகளை நகர்த்தத்தொடங்கினர்.

அன்று சரியாக 11-30 மணியளவில் 843 வர்க்க யுத்த டாங்கிகள் ஜனதிபதி மாளிகையின்முன்பாக உள்ள இரும்புக் கேற்றை உடைத்துக்கொண்டு உட்புகுந்தது. வடவியட்நாமின ஆணையிடும் அதிகாரியான லூபி வான் தொண் பிரதி ஆணையிடும் அதிகாரி பாம் க்வான் ஜனதிபதி டொன் க்வான்க்மின்கெட்டை கைதுசெய்தது மாத்திரமல்ல சைகோன் வானொலி நிலையம் மூலம் தென்வியட்நாமை வடவியட்நாமின் கீழ் கொண்டு வரப்பட்டது என்ற செய்தி ஒலிபரப்பப்பட்டது. அத்துடன் சைகோன் நகரத்தை ஹோசிமின் நகர் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும் அறிவித்தார்கள்.

இரத்த ஆறாக ஓடிய வியட்நாம் போரில் 1,20,000 வியட்நாம் படைகளும் 20,000 அமெரிக்கப்படைகளும் கொல்லப்பட்டனர் என்று தரவுகள் மூலம் அறியக்கிடக்கின்றன.

---

வெளிவந்துவிட்டது
A/L
இந்து நாகரிகம் பகுதி I
ஆக்கம் :-
க. சொக்கலிங்கம் M. A.
விற்பனையாளர் :
சிறி சுப்பிரமணியம்
பொத்தகக் களஞ்சியம்
235. காங்கேசன்துறை சாலை,
யாழ்ப்பாணம். (ஏ 5006)

## சிறு கதை

# கரையில் துடிக்கும் மீன்கள்

### சொக்கன்

இன்று எனது மனைவியின்கடிதம் கனடாவிலிருந்து வந்திருக்கிறது. கடந்த ஆண்டு எங்கள் மூத்த மகன் விசாகன், பிள்ளைத்தாய்ச்சியான தன் மனைவிக்குத் துணை வேண்டும் என்று அவவை அழைத்துச் சென்றதிலிருந்துதான் இந்தக் கடிதத் தொடர்பு. நான் எங்கள் இளைய மகன் குமரனோடு கொழும்பில் வாழ்ந்துவருகிறேன். இதனால் கடிதங்கள் காலந்தாழ்த்தாது கிடைக்கின்றன.

விசாகன் தன் மனைவியோடும் இரண்டு பிள்ளைகளோடும் கனடாவில் நல்ல நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கிறான்.

மூத்தவளுக்குப் பத்து வயது. இரண்டாவதாய்ப் பிறந்தது, ஆறு மாதமே வயதானது. மூத்தவள் பிறந்த காலத்தில் பெற்ற பட்டறிவும் பணச்செலவுந்தான், இரண்டாவது பிள்ளை வயிற்றிலிருக்கும்போதே, விசாகன் அம்மாவைப் பரிந்து அழைத்த நோக்கம்.

அவன் கனடா சென்று இந்த மாதத்துடன் பதினைந்து ஆண்டுகளாகின்றன. அவன் மனைவி அவனது வாழ்க்கையையும் படுக்கையையும் பகிர்ந்துகொள்ளச் சென்றது பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு. தாலியும், கூறையும், வாழும் உரிமையுமாகத்தான் சென்றாள்.

இளையவன் குமரன் பட்டயக் கணக்கறிஞன் மனைவி கல்லூரி ஒன்றில் ஆசிரியை. இவனுக்கு இரண்டு வயதில் ஒரு மகன். அம்மா இல்லாமல் அப்பா தனித்து யாழ்ப்பாணத்தில் என்ன செய்வார் என்ற பரிவை நாக்கிலும், தன் மகனுடைய பராமரிப்பை மனத்திலும் இருத்திக்கொண்டு குமரன் என்னைத் தன்னோடு வந்திருக்குமாறு வேண்டினான் அவனுடைய வேண்டுகோளைச் சிக்கெனப் பிடித்து கடந்த ஓராண்டாக அவனோடு இருந்து வருகின்றேன்.

என் பிள்ளைகள் திறமைசாலிகள், பெற்றோரது கடைசிக் காலத்தில் அவர்களைக் கண்போலக் காக்கிறோம் என்று வெளியுலகிற்குக் காட்டும் அதேபோதில், மலிவான செவிலி ஒருத்தியையும் பணிவான ஒருவனையும் பெற்றுக்கொள்ளவும் அவர்களால் முடிந்தது. இந்த உண்மையை உணர எங்களுக்கு நெடுநாள் ஆகவில்லை.

மக்களைப் பிரிந்திருந்தாலும் எங்களின் ஓய்வுகால வாழ்க்கை இனிதாகவே கழிந்து வந்தது. யாழ்ப்பாணத்தின் குழப்பங்கள், இழப்புக்கள், நெருக்கடிகள் எங்களை எந்த வகையிலும் தாக்கவில்லை. உற்றார் உறவினர்களின் நல்லது கெட்டதுகளில் கலந்துகொண்டோம். வெள்ளி, செவ்வாய் திருவிழாக்கள் என்று கோவில்களோடு எங்கள் பெரும்பொழுது கழிந்தது. நல்லூர் முருகன் கோவிலுக்குப் பின்னேரங்களில் வழிபாடு செய்யும் சாட்டில் என்னைப் போன்ற 'வெள்ளிப்பனித்தலைவரோடு' வேப்பமர நிழலிலே 'வம்பர் கூட்டமாய்' நடத்திப் பெற்ற இன்பத்தை மறப்பேனா இறக்கும்வரை?

மனைவி கனடா சென்றாா. நான் கொழும்பு வந்தேன். எங்கள் மன அமைதி குடிபோயிற்று. கடந்த நாள்கள் பொய்யாய்க் கனவாய்ப் பழங்கதையாய்ப் போயின.

குமரனின் தந்தை, அவன் மனைவியின் மாமா, குழந்தையின்] பேரன் என்ற தகுதிகள் என்னிடமிருந்து ஒரிரு நாள்களிலேயே பறிபோயின. அதே உரிமைப்பாடு கனடாவில் என் மனைவியிடமிருந்தும் பறிக்கப்பட்டது. இந்த உண்மையை அவவின் முதற் கடிதத்திலிருந்தே அறிந்துகொண்டேன்.

என் மனைவிக்குப் பெயர் பொன்னுச்சி. அவவின் இயல்புக்கும்பண்புக்கும்ஏற்ற பெயர்தான். ஆனல் விசாகனிக்கும் அவன் மனைவிக்கும் மகளுக்கும் அவ பித்தளையாச்சியானதை என்னவென்பேன்!

எனக்காவது குமரன் வீட்டில் இரண்டு துணைவர்கள் இருக்கிறார்கள். ஒருவன் சமையல்காரப் பையன். பேரப்பிள்ளையைப் பராக்காட்டுவதோடு அவனுக்கும் எடுபிடியாய் இருந்ததால் அவனுடைய கடைக்கண் வீச்சு என்னில் விழுந்திருக்கலாம். எப்போதாவது நான் தனது முதலாளியின் அப்பா என்ற எண்ணம் அவனுக்கு ஏற்படுவதுண்டு. அப்போதெல்லாம் ''ஏன் ஐயா!' இங்கே கிடந்து தொல்லைப்படுகிறீர்கள்?பேசாமல் உங்கள் மூத்த மகனுக்கு எழுதிக் கனடாவுக்குக் கூப்பிடுவிக்கலாம்தானே? அம்மாவுக்கும் உதவியாயிருக்கும்'' என்பான். அவன் இப்படிச் சொல்கையில் என் கண்கள் கசியத் தொடங்கும். மெல்ல மறுபக்கம் திரும்பி, ''ஓமடா! நீ சொல்வதும் உண்மைதான்'' என்றபடி கண்களைத் துடைத்துக்கொள்வேன்.

என்னுடைய மற்றத் துணைவன் என் மகளின் மடியைக் கிளுகிளுக்க வைக்கும் 'பிறவுணி.' நான் உண்ட மிச்சம் மீதிகளை - வெதுப்பிப் பொருக்குகள் போன்றவற்றை-அடிக்கடி பெறும் நன்றி உணர்ச்சி? 'சீ நாயே' என்று என் எரிச்சலைக் காட்டி காலால் அதை உதைத்தால்,அது வாள்என்று ஊளையிட்டு அடுத்த நொடியில் மீண்டும் என் காலை நக்கும். என் செயலுக்கு நொந்துகொண்டே, அதன் முதுகைத் தடவுவேன். அந்த நேரத்தில் ஏனோ பொன்னுச்சியின் நினைவு என்னைச் சூழ்ந்துகொள்ளும்.

பார்த்தீர்களா? மனைவியின் கடிதம்வந்தது என்று சொல்லிவிட்டு ஏதோ எல்லாம் உளறுகிறேன். எல்லாம் வய்துக் கோளாறு. எழுபதைத் தாண்டியதன் அறிகுறி! கடவுளும் இந்தக் காலத்து நிதி அமைச்சர் போலத்தான். என் போன்ற பழசுகளின் குறையை நிரப்ப வயதென்ற மானியத்தை அள்ளி வழங்குகிறார். அவர் வாழ்க!

என்பிள்ளைகளில் என்ன குறையிருந்தாலும் ஒன்றில் மட்டும் அவர்கள் மிகநல்லவர்கள், நாகரிகமானவர்கள், பிறர் கடிதத்தில் பூராயம் பார்க்கும் பழக்கம் அவர்கள் அறியாதது. குமரன் தனது அண்ணனின் கடிதத்தைக்கூட அரைகுறை மனத்தோடுதான் பார்ப்பான், அம்மாவின் கடிதமோ ? வீட்டில் பெரிய குப்பைக்கூடை இருக்கிறது!

எனக்குக் கூடப் பொன்னுச்சியின் கடிதம் எந்தவகையான ஆர்வத்தையும் தூண்டுவதில்லை என்பது உண்மைதான் வெறுப்பினாலல்ல; அச்சத்தினால். கடிதங்களா அவை? கண்ணீர் ஆறுகள். மாதிரிக்கு அவவின் கடிதங்களிற் சில பகுதிகள்.

(1)

''இங்கு நான் சிறைப்பட்டுக்கிடக்கிறேன். பெரியதம்பி [தம்பியாம்!]யோ அவன் பெண்சாதியோ என்னைத் தூசாகத்தான் நினைக்கிறார்கள் பத்தடிச் சதுர அறையிலே முடங்கிக் கிடக்கிறேன். குழந்தையில்கூடச் சலிப்பு உண்டாகிறது''!

(2)

''விசாகனின் மூத்தமகளுக்கு [பேர்த்தி என்று சொல்லவே நாகூசுகிறது] இன்னும் பத்து வயதுகூட ஆகவில்லை. கண்ட நின்ற வெள்ளைக்காரப் பொடியளுடன் கைகோத்துக்கொண்டு ஏமஞ்சாமம்பாராது வெளியே போகிறாள். சில சமயங்களில்...சீ! எல்லாம் வெட்டவெளி. அவளுக்குத் தமிழ் சுட்டுப்போட்டாலும் வராது. நான் ஏதாவது சொன்னால் தாட்பூட் என்று குதிக்கிறாள். தகப்பனோ தாயோ இதைப் பொருட்படுத்துவதே இல்லை. இங்கிருக்கும் ஒவ்வொரு நொடியும் நரகந்தான்.

(3)

இன்று பெரியதம்பி வீட்டில் இருந்தான். பெண்சாதி இரவுப் பணிக்கென்று போய்விட்டதால் தனிமையில் இருந்தான். ''எட தம்பி, உன்ர மூத்தவளின்ர போக்கைப் பார்த்தியே? நாளைக்கு ஊருக்குப் போனால் ஆற்றையேன் முகத்திலை முழிக்கேலுமே? அவளைக் கொஞ்சம் கண்டிச்சுவை'' என்று மெல்லச் சொன்னேன். அவன் சீற்றம் கொண்டு துள்ளிக்குதித்தான். ''அம்மா, உனக்கு இந்த நாட்டின்ரை போக்குத் தெரியாது. இங்கை எல்லாப் பிள்ளையளும் உப்பிடித்தான். அதுகளின்ரை போக்கிலை தலையிடப் பெற்றோருக்கே உரிமையில்லை. நீ வாயைப் பொத்திக்கொண்டுகிட, கவிழுற காலத்திலை உனக்கேன் சம்பளமில்லாதவேலை?'' என்றான்.


(4)

''இனி ஒரு கணமும் இந்த வீட்டிலை இருக்கேலாது. விசாகனின் பெட்டை எனக்குஅடித்துப்போட்டாள். அதைப் பார்த்து அவனின் தாய் சிரிக்கிறாள். ''உவவுக்கு உது வேணும். நீங்கள் அழாதையுங்கோ அப்பா வரட்டும். பாட்டிக்கு இன்னும் அடிவாங்கிக் குடுப்பம்'' என்கிறாள் விசாகன் வரட்டும். ''என்னை உடனடியாக கொழும்புக்கு அனுப்பிவிடு'' என்று அவனைக் கேட்கப்போகிறேன். சின்னவனும் வேண்டாம், பெரியவனும் வேண்டாம். நாங்கள் யாழ்ப்பாணம் போவம் அங்கை எங்கடை கொட்டிலும் தோட்டமும் இருக்கு. உங்களின் ஓய்வூதியமும் கிடைக்கும். சாகும் பொழுதாவது நிம்மதியாய்ச் சாகலாம்''

இதுதான் இன்று வந்த கடிதம்.

'பொன்னுச்சி, எங்கள் ஊரைச் சிங்களப்படை கைப்பற்றிச் சுற்றி வளைத்திருப்பது உனக்குத் தெரியாது. எங்கள் வீட்டுக்கு நாங்கள் போகமுடியாது?

'ஒன்று அகதிகள் தங்ககம் அல்லது கைதடி முதியோர் இல்லம்' 'எது உனகடு விருப்பம்' ★



# ஊருக்கு உபதேசம்

''திருமதி ரோசா பார்க்'' (52 வயது) என்ற நீக்கிரோ பெண்மணி நகர பஸ் ஒன்றின் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். அந்த பஸ் ஒரு தரிப்பில் நின்றது. சில வெள்ளைக்கார பயணிகள் அந்த பஸ்ஸில் ஏறினர்.

உடனே அந்த பஸ் சாரதி திருமதி பார்க்கைப் பார்த்து அந்த வெள்ளையர்களுக்கு இடம்கொடுக்குமாறு உத்தரவிட்டார்.

**புதிய உலக ஒழுங்கு பேணப்பட வேண்டும், மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்று ஊருக்கு உபதேசித்தும், சந்தர்ப்பம் கிடைக்கும்போது அந்த அடிப்படையில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபடும் ஐக்கிய அமெரிக்காவில் என்ன நடக்கிறது. மனித உரிமைபேணப்படுகிறதா? இல்லவேயில்லை. அமெரிக்க ''ரைம்ஸ்'' பத்திரிகையின் 60 வருடப் பிரசுரத் தொகுப்பில் கீழ்க்காணும் உண்மைச் சம்பவம் பதியப்பட்டுள்ளது:**

ஆனல் துணிவு மிக்க அந்த நீக்ரோ பெண்மணியோ அதற்கு மறுத்துவிட்டார். அதற்கு அவருக்கு கிடைத்த தண்டனை 10அமெரிக்க டொலர்கள் அபராதம்.

அலபாமா சட்டத்தின்படி பஸ் சாரதி ஒருவரின் உத்தரவுகளை மீறும் பிரயாணிகளுக்கு இந்த 10 டொலர் அபராதம் அப்போது வழக்கமாக விதிக்கப்பட்டு வந்தது.

திருமதி பார்க் அனுபவித்த இந்த நிலை மாத்திரம்தான் நீக்ரோக்களுக்கு என நினைக்துவிடாதீர்கள். வெள்ளைக்காரர் நீக்ரோக்களுக்கு எதிராக பொருளாதார எதிர்ப்புகளைக் கூட மேற்கொண்டிருந்தனர்.

தென்பகுதியிலுள்ள வெள்ளை இனத்தவர்களின் கவுன்சில் இந்த விடயத்தில் இரு முனைகளும் தீட்டப்பட்ட ஒரு பயங்கரக் கத்தியாகவே நடந்துவந்தது.

திருமதி ரோசா பார்க் கைதுசெய்யப்பட்டு 48 மணி நேரத்துக்குள் அந்த பஸ் சேவை நடந்த இடத்தில் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. நீக்ரோக்கள் கூடுதலாக வாழும் பகுதிகளில் இந்த துண்டுப் பிரசுரங்கள் மின்னல் வேகத்தில் கைமாறின. நகரத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த பஸ்களை பகிஷ்கரிக்குமாறு அந்த துண்டுப் பிரசுரங்களில் கேட்கப்பட்டிருந்தது.

இந்த பகிஷ்கரிப்பு அவர்களுக்கு நல்ல வெற்றியைத் தந்தது. தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்வரை யில் தமதுபகிஷ்கரிப்பைத்தொடர்வதென நீக்ரோக்கள் முடிவு செய்தனர்.

அவர்கள் கோரிக்கைகள் வருமாறு: பஸ்வண்டிகளில் முதலில் ஏறும் பிரயாணிகள் என்ற அடிப்படையில் நீக்ரோக்களுக்கு ஆசன வசதி அளிக்கப்படவேண்டும், வெள்ளையர்கள் பஸ்களில் ஏறும்போது அவர்களுக்கு நீக்ரோக்கள் எழுந்து தமது ஆசனங்களை வழங்கத்தேவையில்லை, வெள்ளையராக இருக்கும் பஸ்சாரதிகள் நீக்ரோ பிரயாணிகளுக்கு அதிக மரியாதை காட்டவேண்டும், நீக்ரோக்கள் வாழும்பகுதிகள் ஊடாக சேவையில் ஈடுபடும் பஸ்களில் நீக்ரோ இன சாரதிகள் சேவைக்கு அமர்த்தப்படவேண்டும்.

அந்த பகிஷ்கரிப்பு வெற்றி அளித்தது. அந்த வேலை நிறுத்த உற்சாகம் குன்றியதாக தென்படவில்லை. ஒரு மோட்டார்கார் கொம்பனியில் பணிபுரியும் நீக்ரோ போதகர்நீண்டதூரம் களைத்து வந்து கொண்டிருந்த வயது போன மாது அருகே தன் காரை கொண்டுசென்று நிறுத்தி ''சகோதரி நீங்கள் களைப்பு அடையவில்லையா'' எனக்கேட்டார்.அதற்கு அந்த மாது: எனது ஆத்மா ஏற்கனவே அநேக காலமாக சோர்வடைந்து போயிற்று. தற்போது எனது பாதம்சோர்வடைந்துபோக, எனது ஆத்மா ஆறுதல் அடைகிறது என்றார்.

## படையினரின் நஷ்டஈட்டுத் தொகை

கடந்த 10 வருட காலமாக இலங்கை ஆயுதப் படையினருக்கு வழங்கப்பட்ட நஷ்டஈட்டுத் தொகைகள்.


| | |
|---|---|
| இராணுவம் | 249,630'930. |
| கடற்படை | 11,822,500. |
| விமானப்படை | 13,410,400. |
| மொத்தம் | 324,863,830. |

# தமிழீழ வி

சீனியில் நாம் தன்னிறைவடைய குறைந்த

# வொறியைக் க

ரூபா 1000000 உங்களுக்காகவே





- ★ 5% பயன்பாடு 60% ஆக உயரும்
- ★ சீனிக்காக வெளியேறும் பணம் மீதப்படும்
- ★ மாற்று எரிபொருளாய் மதுசாரம் கிடைக்கும்
- ★ வேலை வாய்ப்புக் கூடி வாழ்க்கைத் தரம் உயரும்
- ★ சமுதாயப் புரட்சிக்கு வழி வகுக்கும்

யாழ்ப்பாணம்
நல்லூர் ஒளநூலகம்.

# ...ஞானிகளே!

...செலவில் நிறைந்த பதநீர் தேவை; இதற்கான

# ...ண்டுபிடியுங்கள்

- ★ குறைந்த நேரத்தில் மரத்தில் ஏறி இறங்க -
- ★ பாரம்பரிய முறையில் தொழில் செய்வோர் விரும்பக்கூடிய
- ★ குறைந்த மனித வலுவில் இலகு தொழில் நுட்பம் கொண்ட-
- ★ இலகுவாகக் கையாளக் கூடிய - ஒட்டுமொத்தத்தில் மலிவாக பதநீரை உற்பத்தி செய்யக்கூடிய பொறியை உருவாக்கித் தாருங்கள்

- பனந்தொழில் வல்லுனர்களின் நன்மை கருதி -

## 10 லட்சம் ரூபாய்

உங்களுக்குத் தரக் காத்திருக்கின்றது

## பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதி

### தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

அரசியல்துறை, தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழம்

மாதர் அரங்கு

# மரபை உடைத்து புதுமை படைத்தாள்

'சிறுநண்டு மணல்மீது
படமொன்று கீறும்
சிலவேளை அதைவந்து
அலைகொண்டுபோகும்..
பொதியோடு கறிசோறு
தருகின்றபோதும்
கடல் மீது அவள் கொண்ட
பயம் ஒன்று போதும்...'


நெய்தல் நிலப் பெண்கள் பற்றி மகாகவி அழகாகப் பாடுகின்றார். தன் கணவனுக்கு அல்லது தந்தைக்கு அல்லது சகோதரனுக்கு உணவைக்கட்டிக் கொடுத்துவிட்டு அவர்கள் எந்தவித ஆபத்திலும் சிக்காது உயிரோடு திரும்பி வரவேண்டுமென்ற ஆதங்கத்தோடு அந்தக்கடலையே பயத்தோடு பார்த்துக்கொண்டு நிற்பாளாம் அவளுக்கு கடல்மீது அவ்வளவு பயம்.

கோட்பாட்டைத் தகர்த்தெறிந்தாள்.

பெண் என்றால் அவள் அன்னநடை நடப்பாள்...... பூவிலும் மென்மையாக இருப்பாள் என்றெல்லாம் புலவர்களால் வர்ணிக்கப்பட்டவள் தான் கட்டுமரத்தைத் தள்ளிக்கரை சேர்க்கின்றாள்.

பிடித்துவரும்மீன்களை கடற்கரையில்விற்றும்அப்படி விற்கமுடியாத சந்தர்ப்பத்தில் சயிக்கிளில் சந்தைக்கு கொண்டு சென்று விற்றும் பணத்தைச் சம்பாதிக்கின்றார்.

தன்தொழிலுக்கு வசதியாக சாரத்தையும் சேட்டையுமே அணிந்து கொள்ளும் இவள் தன்னை அந்நியமாகப் பார்க்கும் சமூகத்தைப் பற்றிச் சிறிதும் கவலைப் படவில்லை.



★ படம். தகவல் - சுபாஸ் ★

அப்படிப்பட்ட நெய்தல் நில சமுதாயத்தில் வாழ்ந்த பெண் ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடித்து வருகின்றார் என்றால் அதிசயம் தானே?

இந்த அதிசயம் நடப்பது அமெரிக்காவிலோ ரஷ்யாவிலோ அல்ல. எம் தமிழீழப் பிரதேசத்தில்தான். பருத்தித்துறையில் வசிக்கும் செபமாலைநாயகிதான் அந்தப் பெண். சிறுவயதிலே அப்பாவுடன் விளையாட்டுத்தனமாக கட்டுமரத்தில் மீன்பிடிக்கச் சென்றுவரும் இவள், இன்று தனியே கடலுக்குச் சென்று மீன்பிடித்து வரும் வலிமையைப் பெற்றுள்ளார்,

தொகுப்பு:

**விசாலி.**

செபமாலை நாயகியின் குடும்பம் கொடிய வறுமையில் வாடியது. அடுப்பில் பூனைபடுக்கும் நிலை. இவரின் தந்தை அந்தோனிப்பிள்ளை தொழிலுக்கு செல்வதற்கு உதவியாக யாரையும் கூலி கொடுத்து வைக்கமுடியாது இருந்தார். இந்த நேரத்தில்தான் செபமாலைநாயகிஅப்பாவுக்குத் துணையாக தொழிலுக்குச் சென்றாள். இன்று இதையே தனது தொழிலாக்கிக்கொண்டார்.

இதன்மூலம் பொதுவாக அல்லது முடிவாக ஆண்களால்தான் மீன்பிடித்தொழிலைச் செய்யமுடியும் என்ற

''நாங்கள் கஷ்டப்பட்டால் யாரும் உதவி செய்யமாட்டார்கள். நாங்கள் தான் எங்களுக்குத்துணை. நாங்கள் வாழ்வதற்காக இந்தத் தொழிலைச் செய்வதில் நான் வெட்கப்படவில்லை'' என்று தைரியமாகக் கூறுகின்றாராம்.

முப்பத்தொருவயதுடைய செபமாலைநாயகி இன்னும் திருமணம் செய்யவில்லை. திருமணம் செய்யவேண்டுமென்பதற்காக அதற்கு சாதகமாக தன்வாழ்க்கையை அமைத்துக்கொள்ள விரும்பவில்லை. ஆனால் தன்னைப்புரிந்து 'தன்னை பற்றிய சகல விடயங்களையும் அறிந்து தன்னைத் திருமணம் செய்ய ஒருவர் தயாரென்றால் அவரைத் திருமணம் செய்துகொள்வது என்ற கொள்கையில் வாழ்கின்றார். நாம் நினைத்துப் பெருமைப்பட வேண்டிய விடயங்களில் செபமாலைநாயகியின் துணிச்சலும் ஒன்றாகிவிட்டமையை மறுக்கமுடியாது.

ஆணையும் பெண்ணையும் பிரமன் படைத்தான். ஆனால் ஆணுக்கு இன்ன தொழில் பெண்ணுக்கு இன்னதொழில் எனவகுத்துமா?...... கொடுத்தான்.

தொழில் என்றால் அதை யார் செய்தால்தான் என்ன? மரபு என்ற போர்வையில் ஏன் மறைந்து கொள்ளவேண்டும்? நாம் இதை உணர்ந்து ஏற்றுக்கொள்ளப்பழக வேண்டும். எமது தேசிய விடுதலைக்கு இந்த மனப்பான்மை இன்றியமையாதது.

## கின்னஸ் சாதனைகள்

★ உலகத்தில் அதிக உஷ்ணம் கூடிய பிரதேசமாக இருப்பது இந்தோனேசியாவில் உள்ள டவல் என்ற இடமாகும், 1960 தொடக்கம் 1966 வரை வருடாந்த உஷ்ண அதிகரிப்பு 34 செல்சியர்ஸ்ராக இருந்தது.

★ உலகத்தில் அதிக பாரமுள்ள மனிதனாக கணிக்கப்படுவர் வி. ஜே. அல்பேட் ஜாக்சன் என்பவரே இவர் அமெரிக்காவில் உள்ள மிசிசிப்பி பிரதேசத்தில் குண்டன்சி என்ற பிரதேசத்தில் வசிப்பவர் இவரின் நிறை 404 றாத்தலாகும்.

★ உலகத்தில் அதிக அறைகளைக் கொண்ட வீடு இங்கிலாந்தில் உள்ள கென்ட் பிராந்தியத்தில் உள்ளது; தோல் என்பவரால் கட்டப்பட்ட இந்த வீடு ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு அறையாக கட்டப்பட்டு, இப்பொழுது 365 அறைகளைக் கொண்ட வீடாகக் காட்சியளிக்கின்றது,

★ ஒலிம்பிக் போட்டிகளில் ஒருவர் கூடிய தங்கப் பதக்கங்கள் பெற்றது. அமெரிக்காவில்உள்ள ரேமண்ட் கலரன்ஸ் எவிரி என்பவர் தான். இவர் உயரப் பாய்தலில் 10 முறை தங்கப் பதக்கங்கள் பெற்றுள்ளார்.

## பல்சுவை

★ பார்வை யற்றவர்களுக்கு பிரெயலிமுறையில் முதன்முதலாக செய்தித்தாள் யப்பானில் வெளியானது அதைத் தொடர்ந்து ஹொங்கொங்கில் அதேபோல் வெளியானது தற்போது இந்தியாவிலும் அதேபோல் ஒரு செய்தித்தாள் வெளியாகிறது. 'கேசரி' என்ற பெயரில் மராத்திய மொழியில் அது வெளிவருகிறது.

★ ஒரு மனிதனுக்கு ஒரு நாளைக்குத் தேவையான சராசரி உணவு ஒரு கிலோவாகும். தண்ணீர் 1·5 லீற்றரும், காற்று 12 கிலோவும் ஒரு நாளைக்கு மனிதனுக்கு தேவைப்படுகின்றது.

★ சகாரா பாலைவனத்தில் 'தகூஜா' பகுதியில் சில வீடுகள் முற்றிலும் தூய உப்பால் மட்டும் கட்டப்பட்டுள்ளன. இதை யார் எப்போது கட்டினார்கள் என்பது இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை.

★ அவுஸ்த்திரேலியாவில் மிகக் குறைந்த எடையுள்ள விமானம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 'ஹோர்னெட்' என்பது இதற்குப் பெயராகும். 90 கிலோ எடையுள்ள இந்த விமானம் 113 கிலோமீட்டர் வேகத்தில் பறக்கக்கூடியது அலுமினியம், மரப்பலகை பொலித்தீன், பைபர் கிளாஸ் ஆகிய மூலப் பொருட்கள் கொண்டு இது உற்பத்தி செய்யப்பட்டது.

★ குருதியில் கொலஸ்டிரோல் உருவாவதை நிறுத்தி இருதய நோய் ஏற்படுவதை தடுக்கக்கூடிய முட்டைகளை அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் ஆராய்ச்சி மூலம் கண்டுபிடித்திருக்கிறார்கள். முட்டைகளில் ஒமேகா 3என்றகொழுப்பமிலம் இருக்ககூடியதாக இந்த ஆரோக்கியமான முட்டைகளை உற்பத்தி செய்துள்ளார்கள்ஒமேகா 3 கொழுப்பமிலம் சாதாரணமாக மீன்களில்தான் காணப்படுகின்றன.

— ஶ்ரீ

## கவிமலர்

### போர் முனையின் சுகம்......

வெற்றுக்காகிதத்தில் விளாசுவதை விட்டு
வீரவசனங்கள் பேசுவதை விட்டு
புற்று நோய் போலெங்கள் மண்ணில்
புகுந்துவிட்ட எதிரியை விரட்டவா!
— அப்போது.........
போர் முனையின் சுகம்...... புரியு முனக்கு!

இருபதிலும் அறுபதிலும் நாற்பதிலும் கூட
இருக்கின்றார் இராணுவத்தில் அறிவாயோ?
— அறிந்திருந்தால்......
பொறுப்பற்று இன்று வயதேறிப் போச்சென்று
புலம்புவதை விட்டுக் கிளம்பிப்போ; அப்போது......
போர்முனையின் சுகம்...... புரியுமுனக்கு!

முன்னேறும் புலிவீரர் கடலேறும் போது
முன்வந்து படகேறி ஓட்டிப் பார் இல்லையெனில்.....
பின்னோடி வருமெதிரி தனைக்கண்டு புலியிடஞ்சொல்
— அப்போது......
போர் முனையின் சுகம்......புரியு முனக்கு!

களைத்து ஒருவீரன் வரும்போது கருணையுடன்
கையிலுள்ள எலுமிச்சம் பழ நீரை.................
அள்ளிக்கொடுத்து அருகில் இருந்துபார்; —
அப்போது
போர்முனையின் சுகம்.........புரியு முனக்கு!

எதிரிமுகாம் தனைவளைக்க
எங்கள் புலிவீரர் செல்கையிலே
ஓரமாய் நின்று உலைவை; கோழியை உரி;
கிழங்கை வெட்டு; பார்சலைக்கட்டு; கொண்டு
போய்க் கொடு!
—அப்போது.........
போர் முனையின் சுகம் புரியும் உனக்கு

வள்ளம் வள்ளமாய் ஆயு தங்கள்
அள்ளி வரும்போது காத் திருந்து
புள்ளி மானாகப் போய்த் தூக்கு — அப்போது
போர்முனையின் சுகம்.........புரியுமுனக்கு!

பல்கலைக் கழகம் போய்ப்படித்தால் என்ன?.........
பாவலராய் மற்றவர்முன் நின்றால்தான் என்ன?...
தொல்லை தருமெதிரி தனையழிக்கப்
பயந்துநின்றால்
செல்லக் காசே நீ......! வாழ்ந்தென்ன?.........
செத்தென்ன?
''இல்லை நான் மறவனெ''ன எடுத்துரைக்க
நீ நினைத்தால்
வல்லவனாய்..... ஓர்முறை தூக்கிப்பார்
ஆயுதத்தை.........
— அப்போது
போர் முனையின் சுகம்......புரியுமுனக்கு!

— கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன்

# தமிழ் மக்களுக்கு உரிமை வழங்காது சந்திரிகா தவறிவிட்டார்

இலங்கையில் ஏற்பட்டுள்ள துக்ககரமான மோதல்களுக்கு ஒரு முடிவு ஏற்படுத்தாமல்விட்டதையும், சமாதானத்திற்காக மககள் ஜனநாயக வழியில் கொடுத்த ஆணையை நிறைவேற்றாமல் காலம் கடத்தியதையும் பிரிட்டனிலுள்ள இந்திய வம்சாவழியினரின் சங்கத்தினராகிய நாங்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை கடுமையாக கண்டிககிறோம்.

இந்த அமைப்பின் தலைவரான திரு. சின்னமணி பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரித்தானியமனித உரிமைகள் அமைப்பு பிரதிநிதிகள் லண்டனில் கலந்து கொண்ட ஒரு கூட்டத்தில இந்த கண்டனத்தை வெளியிட்டார்.

''திருமதி சந்திரிகா குமாரதுங்க, அண்மையில் நடந்த சமாதான முயற்சிகள் குறித்து முன்னுக்குப் பின் முரணாக பேசியதிலிருந்து அவரது உண்மை சுரூபம் தெரியவருகிறது. அவர் என்ன நோககில் உள்ளார் என்பதும் தெளிவாகபுரியவில்லை.

விடுதலைப் புலிகளையும் அவர்களின் தலைவரையும் ஒரு கட்டத்தில் பெருமையாக புகழ்ந்து பேசிய ஜனாதிபதி, மறுகணத்தில் தலைவர் பிரபாகரனை கண்டித்து பேசியுள்ளார். தமிழ் மக்களுககு உரிமைகள் வழங்குவதாக வாக்குறுதி அளித்துவிட்டு பின்னர் அதனை நிறைவேற்றவும் தவறிவிட்டார்,

லண்டன் லூசியன் நகர மேயர்

**சின்னமணி**

சர்வதேச சமூகம் அவர் அளித்த உறுதி மொழிகளை மேலோட்டமாக நப்பி உதவுவது கவலைககிடமானது.

மேலும் இந்தவிடயம் பிரித்தானிய வெளியுறவு காரியதரிசி டகளஸ் கோர்ட்டுககும் தெரிவிககப்பட்டுள்ளது.

# தமிழீழத்தினைத் தெரிந்துகொள்ளுங்கள்

1. தமிழீழம் எத்தனை மாவட்டங்களைக் கொண்டுள்ளது? அவை யாவை?

   ஆறு. மட்டு-அம்பாறை, திருகோணமலை, முல்லைத்தீவு, மன்னார், வன்னி, யாழ்ப்பாணம்.

2. தமிழீழம் ஏறக்குறைய எத்தனை கிலோ மீற்றர் நீளமான கடற்கரையைக் கொண்டிருக்கிறது?

   1200 கிலோ மீற்றர்.

3. தமிழீழத்தில் எந்த மாவட்டம் அதிகளவு கடற்பரப்பைக்கொண்டுள்ளது?

   யாழ்ப்பாண மாவட்டம்.

4. கரும்புலிகள் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?

   யூலை 5.

5. உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள் நடைபெற வித்திட்டதமிழீழத்து அறிஞர் யார்?

   வண, பிதா யோசப் தனிநாயகம் அடிகளார்.

6. அம்பாறை மாவட்டத்திற்கு முன்னர் வழங்கிவந்த பெயர் என்ன?

   பட்டிப்பளை.

7. ஊர்காவற்றுறைக்கு ஒல்லாந்தர் சூட்டிய பெயர் யாது?

   கைற்ஸ்.

8. தமிழீழ-இந்தியப் போர் ஆரம்பித்த நாள் எது?

   10 - 10 -1987

**தொகுப்பு: நிலாமகன்**

குட்டிக்கதை

# மூடர்கள் சேர்க்கை முதலுக்கே கேடு

ஒரு மூடனும் செட்டியும் சேர்ந்து தூரப்பயணம் செய்தார்கள். பயணத்தின் பாதி வழியிலே இருண்டுவிட்டது. இருண்ட காரணத்தினால் பயணத்தை நிறுத்தி அந்த மைதானத்திலே நித்திரை செய்ய எண்ணிக்கொண்டனர். மூடனானவன் திறந்த மைதானத்தின் நடுவிலே படுத்துக்கொண்டான். செட்டியானவன் சமீபத்தில் உள்ள செடி மறைவிலே படுத்துக் கொண்டான்.

அவ்வழியால் திருடர்கள் வந்தனர். வரும்போது அவர்களின் காலில் குறுக்கே படுத்திருந்த மூடன் தடக்கினான். திருடனில் ஒருவன் இதுஎன்ன கட்டைபோல் இருக்கிறது'' என்றான். மூடனுக்குகோபம் பொத்திக்கொண்டு வந்தது. என்ன என்னைக் கட்டை என்கிறானே என்ற எண்ணம் அவனுக்கு எரிச்சலை உண்டுபண்ணியது. மூடன் சொன்னான் ''போ . போ... உன் வீட்டுக் கட்டை இடிப்பிலே ஐந்து பணம்முடிந்துகொண்டு நன்றாகப்படுத்திருக்குமா. .? என்றான் மூடன். திருடர் அவனது இடுப்பைத் தடவிப் பணத்தை எடுத்துக்கொண்டு போனார்கள்.

போகும்போது இந்தப் பணம் செல்லுமா? செல்லாதா? என்று தமக்குள் பேசிக்கொண்டனர். மூடனுக்கு மீண்டும் கோபம் வந்தது. பணத்தை எடுத்தது மட்டுமல்லாது பணத்தைச் செல்லாது என்கிறார்களே ... இதற்கு என்ன செய்யலம்ா என்று யோசித்தவன் வேண்டுமானால் செல்லுமா செல்லாததா என்று அங்கே படுத்திருக்கும் செட்டியாரிடம் காட்டுங்கள் என்று செட்டியார் படுத்திருக்கும் திசையைச் சுட்டிக் காட்டினான் மூடன். இதைக் கேட்ட திருடர்கள் மறைவில் பணத்துடன் படுத்திருந்த செட்டியின் நூறு வராகன் பணத்தையும் பறித்துக்கொண்டு சென்றனர் மூடனுடன் பயணம்செய்த செட்டிமுதலை இழந்து தமது பயணத்தைநிறுத்திவீடு சேரலானார். ★

# "கணனி"

இருபதாம் நூற்றாண்டில் விஞ்ஞானம் செய்த சாதனங்களுள் முன்னணியில் திகழ்வது ''கணனி'' என்னும் கருவியாகும். இதனைக் கண்டுபிடித்தவர் ஒரு மனிதன் தான். ஆனால் இது மனிதனுடைய மூளையிலும் அதிக அளவு விரைவாகச் செயல்படக்கூடிய சாதனம். இது இன்று சகல துறைகளுக்கும் ஒரு உயிர்நாடிக் கருவியாக விளங்குகின்றது. மற்றும் மனிதன் தனது கைரேகையை வைத்து எதிர்காலத்தை நிர்ணயிக்கும் சாத்திரத் துறையில் கணனி பங்கேற்கிறது.

**சி. கங்காதரன்**
ஹாட்லிக்கல்லூரி

# ஏக்கம்

சிட்டுக் குருவி சிட்டுக் குருவி
சின்னஞ் சிறிய சிட்டுக் குருவி
வட்டம்போட்டு உனைப்போல் நானும்
வானில் பறக்க முடியலையே

வண்ணத் தோகை விரித்து அழகாய்
வந்து ஆடும் மயிலாரே
உன்னைப்போல எனக்கும் தோகை
இலையே ஆடி மகிழ்வதற்கு

இனிய குரலில் பாடிக் களித்து
இகத்தை மறக்கும் குயிலக்கா
கனிவோ டதனைத் எனக்குத் தந்து
கவலை மறக்கச் செய்வாயே

அடிமை வாழ்வு வேண்டாம் நம்போல்
அகிலம் யாவும் நமதென்னும்
உரிமை பெற்று வாழும் உலகு
உமைப்போல் எமக்கும் கிட்டாதோ?

**-நெடுந்தீவு லக்ஸ்மன்**

# விஞ்ஞான விளக்கங்கள்

கிரகங்கள் சூரியனை சுற்றிவர எடுத்துக்கொள்ளும் காலங்கள்:

புதன் 88 நாள், வெள்ளி 225 நாள், பூமி 365¼, செவ்வாய் 687 நாள், வியாழன் 21 ஆண்டுகள், சனி 292 ஆண்டுகள், யூரேனஸ் 84 ஆண்டுகள், நெப்ட்யூன் 165 ஆண்டுகள், புறிட்டோ 249 ஆண்டுகள்.

சூரியன் வயது 550 கோடி ஆண்டுகள்.

கோள்களின் அளவுகள்:

புதன் விட்ட அளவு 2900 மைல், வெள்ளி 7600 மைல்கள், பூமி 7926 மைல், செவ்வாய் 4200 மைல், வியாழன் 88,700 மைல், சனி 75,100 மைல், யூரேனேஸ் 32,000 மைல்கள், நெப்ட்யூன் 3,0000 மைல், புளுட்டோ 1865 மைல்கள்.

# விடுகதைகள்

1. சிவப்புச் சட்டை அணிந்து கொண்டு எல்லா ஊர்களிலும் இவள் இருப்பார் அவள் யார்?
2. மரத்திலே காய்க்காத பூ வீட்டிலே இருக்கின்ற பூ. அது என்னபூ?
3, நீரோடி நிலம் பிழந்து நிலவாழை குருத்தெறியும் காரோடிய கருமணலிலே கருவில்லா முட்டை அது என்ன?
4. ஒரே ஒரு சிப்பிக்குள் ஒரு நூறு முத்துக்கள் அது என்ன?
5. ஒப்பாரி வைப்பான். ஊரைக் காட்டுவான். தனக்குக் கிடைத்ததை தானமும் செய்வான். யார் அவன்?

1. தபால்பெட்டி 2. சுண்ணம்பு 3. காளான் 4. மாதுளம்பழம் 5. காக்கை.

# இலங்கை இனப்பிரச்சினையில் எமது எழுத்தாளர்களின் பங்களிப்பு

திருகோணமலை குடியேற்றம் 1950களில் தொடங்கிவிட்டது. 1965, 1970-ம் ஆண்டுக் காலப் பகுதிகளில் தொடர்ந்து குடியேறி 75-ம் ஆண்டில் சாந்தனுடைய 'அந்நியமான உண்மைகள்' என்ற கதை வரும்போது திருகோணமலை ஒரு அந்நிய நகரமாகச் சித்தரிக்கப்படுகிறது.

64-ம், 65-ம் ஆண்டுக் காலப் பகுதியில் தளையசிங்கம் என்ற இலக்கியவாதி தனது இலக்கிய கோட்பாடான ''மெய்யுள்'' என்ற கோட்பாட்டை வைத்து இலக்கிய அணியை உருவாக்கி வளர்க்கிறார். தமிழர்களுடைய போராட்டம் நியாயமானது என்ற கருத்தை 'போர்பறை' என்ற தன்னுடைய நூலின்மூலம் தெளிவுபடுத்துகிறார்,

எஸ். பொன்னுத்துரையும் கனக செந்திநாதன் அவர்களுக்கு ஒரு கோட்பாடு இருந்தது. இந்தக் கோட்பாட்டில் நற்போக்கு இலக்கியம் உருவாகிறது. இந்தக் காலகட்டத்தில் தான் யாழ்ப்பாணத்தில் யாழ். இலக்கிய வட்டம் உருவாகியது. இதனை 65-ம், 66-ம் ஆண்டுகளில் செங்கை ஆழியான், கனக செந்திநாதன் போன்றோர் முன்னின்று உருவாக்கினார்கள்.

70-ம் ஆண்டுக் காலப் பகுதியில் முற்போக்கு அணியில் புதியவர்கள் உருவாகினார்கள். இதே கால கட்டத்தில் ''சுதந்திரன்'' பத்திரிகையை மையமாக வைத்து இனப்பிரச்னை சம்பந்தமான ஆக்கங்கள் வெளிவரத் தொடங்கின. காசி ஆனந்தன் களை பிரசுரித்து வந்தது.

சாந்தனைப் பொறுத்த அளவில் 1970 ஆண்டுகளில் தமிழ் இனவாதம் தேவை இல்லை என்று எழுதியவர் 1970-ம் ஆண்டு தொடக்கம் 1974-ம் ஆண்டு வரை அவருக்கு மிகப் பெரிய குழப்பம் எற்பட்டது, இனப்பிரச்னை தீர்க்கப்படுமா? தமிழர்-சிங்களவர் பிரச்னை சரியா? பிளவு தேவையா? ஒற்றுமையாய் இருக்க முடியுமா? முடியாதா? மனித நேயத்துக்கும் இன வேறுபாட்டுக்கும் தொடர்பு இருக்கிறதா? இல்லையா? இதைப் பற்றிய கதைகள் பல அக்காலத்தில் வந்தன. 1974-ம் ஆண்டில் ஒரு சின்ன மாற்றம். 1975-ம் ஆண்டு வரை இருந்த மன உளைச்சல்கள் ஒரு கட்டத்தில் உடைத்துக் கொண்டு 'அந்நியமான உண்மைகள்' கதையாக வெளிவருகின்றது.

1977-ம் ஆண்டில் இனக்கலவரம் இடம்பெறுகின்றது. முற்போக்கு, தேசியம் என்ற ஐயங்களுக்கு 77-ம் ஆண்டு இனக்கலவரம் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது, இனக்கலவரம் நடந்த காலத்தில் முருகையன் 1977-ம் ஆண்டு இனப்பிரச்னை சம்பந்தமாக கவிதை எழுதியிருந்தார். நண்

**கலாநிதி நா. சுப்பிரமணியன்**

இந்தக் காலத்தில் சிறையில் இருந்து சில கவிதைகளைப் பாடியிருக்கிறார்.

தேசியவாதம் என்ற மாயமானை நோக்கி எழுத்தாளர்கள் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். எங்களுக்கு தேசியவாதம் பயன் தராது நிச்சயமாக நிலம் பறி போகின்றது. மொழிப்பிரச்னை இருக்கிறது. இதுபற்றி சிந்திக்கவேண்டுமென்று எண்ணம் இருந்த நேரத்தில்தான் ஜேசுராசாவின் 'அலை' பத்திரிகை வெளிவரத் தொடங்கியது. 1975 ம் ஆண்டளவில் 'அலை' இனப்பிரச்னை சம்பந்தமான ஆக்கங்

பர்கள் எப்படி இனவெறியர்களாக மாறினார்கள் என்ற கருத்துப்பட இந்தக் கவிதையை இயற்றியிருந்தார். இந்தக்காலகட்டத்தில்கவிஞர் புதுவை இரத்தினதுரையின் கவிதையும் வெளிவந்தது.

''தேசியம் என்ற பிள்ளை
கருவிலே சிதைந்த காட்சி
கண்களில் தெரியுதம்மா!
பெருத்ததோர் வகுப்பு
வாதம்
புயலடித்து ஓய்ந்ததம்மா''

என்பதாகும்.

(10ம் பக்கம் பார்க்க)

# நாடுகள் சிலவற்றின் பழைய, புதிய பெயர்கள்

| பழைய பெயர் | புதிய பெயர் |
|---|---|
| அபிசீனியா | எத்தியோப்பிய |
| சிலோன் | ஸ்ரீலங்கா |
| சியாம் | தாய்லாந்து |
| நிப்போன் | ஜப்பான் |
| ஹொலண்ட் | நெதர்லாந்து |
| பார்மோசா | தாய்வான் |
| மலாயா | மலேசியா |
| பர்மா | மியன்மார் |
| தென்மேற்கு ஆபிரிக்கா | நமீபியா |
| கோல்ட் கோஸ்ட் | கானு |
| பாரதம் | இந்தியா |

**லோ. ஜெயதரன்**
கொக்குவில் இந்துக்கல்லூரி
ஆண்டு 8.

# வட தமிழீழத்தில் தேங்காயில் சுயதேவையைப் பூர்த்திசெய்ய வீட்டுக்கு இரண்டு தென்னைகள் நாட்டுவோம்

வட தமிழீழத்தின் மண் வளமும், காலநிலையும் தென்னை வளர்ப்பிற்கு உகந்ததாக இருக்கின்றன. உவர் நிலப் பரப்பு அதாவது கரையோரப் பகுதிகள் தென்னை செழிப்பாக வளரக்கூடிய நிலமாக இருக்கிறது. அத்தோடு குடியிருப்பு மேட்டு நிலப்பகுதிகளில் வீட்டுத் தேவைகளுக்காக தென்னைகள் நடுகை செய்து வளர்க்கப்படுகின்றன.

1992ம் ஆண்டுப் புள்ளிவிபரத் தகவல்களின்படி வடதமிழீழத்தில் 1,229,256 பயன் கொடுக்கும் தென்னைகள் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இத்தொகை மாவட்ட ரீதியாக யாழ். மாவட்டத்தில் 3,90,720 ஆகவும், கிளிநொச்சி மாவட்டத்தில் 500,032 ஆகவும், வவுனியா மாவட்டத்தில் 37,740 ஆகவும், மன்னார் மாவட்டத்தில் 104,872 ஆகவும், முல்லை மாவட்டத்தில் 195,892ஆகவும் இருப்பதாகக் கணிக்கப்பட்டுள்ளது.

வடதமிழீழத்தில் சீரான கால நிலையும், போதிய அளவு மழை வீழ்ச்சியும், சீரான முறையில் தென்னைகளுக்குப் பசளை இடுதலும் இருக்குமாயின் ஒரு தென்னை வருடத்துக்கு சராசரியாக 90 தேங்காய்கள் கொடுக்கக் கூடியதாக இருக்கும். மேற்குறிப்பிட்ட காரணிகள் மாற்றடையும்போது தேங்காய் உற்பத்தியில் 10 முதல் 15வீதம் வரை வீழ்ச்சி ஏற்பட முடியும்.

இயல்பான சூழ்நிலையினை கருத்தில் கொண்டு வட தமிழீழத்தில் ஒரு வருடத்தில் 110.633,040 தேங்காய்கள் கிடைக்கும் என்று கணக்கிடலாம். இத்தொகை மாவட்ட ரீதியாக யாழ். மாவட்டத்தில் 35,164,800 ஆகவும், கிளிநொச்சி மாவட்டத்தில் 45,002,880 ஆகவும், வவுனியா மாவட்டத்தில் 3,396,600 ஆகவும், மன்னார் மாவட்டத்தில் 9,438,480 ஆகவும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 17,630,280 ஆகவும் இருக்குமெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

ஒரு நபருக்கு வருடமொன்றுக்கு நேரடிஉணவுத்தேவைக்காக 90 தேங்காய்களும், எண்ணெய்த் தேவைக்காக 2·7 லீற்றர் தேங்காய் எண்ணையும் தேவை என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. 2·7 லீற்றர் தேங்காய் எண்ணெய்பெற 22 தேங்காய்கள் தேவை. எனவே ஒரு நபருக்கு ஒரு வருடத்துக்கு 90-120தேங்காய்கள்தேவைப் படுகின்றன.

இந்த அடிப்படையில் வட தமிழீழ மக்கள் [1992] தொகைக் கேற்ப மக்களின் நுகர்வுக்காக 127,658,000 தேங்காய்கள் தேவை என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது இத்தொகை மாவட்ட ரீதியாக யாழ், மாவட்டத்துக்கு 80,332,800 ஆகவும், கிளிநொச்சி மாவட்டத்துக்கு 17,289,600 ஆகவும், வவுனியா மாவட்டத்துக்கு 11,740,800 ஆகவும் மன்னார் மாவட்டத்துக்கு 8,188,800 ஆகவும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 10,106,000 ஆகவும் அமையும்.

வடதமிழீழத்தின் மக்கள் நுகர்வுக்கான தேங்காய் தேவைக்கும், தேங்காய் உற்பத்திக்கும் இடையே பெரிய இடைவெளி இருப்பதைஉணர முடியும். இந்தப் பற்றுக்குறை 17,024960 தேங்காய்கள் ஆகும். இந்தப் பற்றுக் குறையை நிவர்த்தி செய்ய வட தமிழீழத்துக்கு வெளியே இருந்து தேங்காய் கொள்வனவு செய்யவேண்டிய அவல நிலை இருக்கிறது.

வடதமிழீழ வாழ் மக்களின் வருட மொன்றுக்கான தேங்காய்த் தேவை 127,658,000 எனக்கொண்டு ஒரு தென்னை வருட மொன்றுக்கு சராசரி 90 தேங்காய்கள் கொடுக்கக் கூடியதாக இருப்பின், வட தமிழீழ மக்களின் நுகர்வுத் தேவையைப் பூர்த்திசெய்ய 1,418,420 காய் கொடுக்கும் தென்னைகள் இருக்கவேண்டும் வட தமிழீழத்தில் உள்ள காய்கள் கொடுக்கும் தென்னைகளின் தொகை 1,229,256 தென்னைகள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. வடதமிழீழத்தில் தேங்காயில் தன்னிறையை அடைய வேண்டுமாயின் மேலும் 189,164 காய்க்கும் தென்னைகள் உற்பத்தி செய்யப்படவேண்டும்.

வடதமிழீழத்தில் சுமார் 291,376 குடிபிருப்புகளில் [1992] மக்கள் வாழ்கிறார்கள் என்று கணக்கிடப்பட்டால், இக்குடும்பங்கள் ஒவ்வொன்றும், குடியிருக்கும் வீடோடு சேர்ந்த காணிகளில் இரண்டு தென்னம் பிள்ளைகள் நடுகை செய்து பராமரிக்கப்படுமாயின் சுமார் 582,742 தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்ய முடியும். இப்படித் தென்னை உற்பத்தி பெருக்கப்படுமானால் முழுத் தென்னைகள் தொகை 1812008ஆக உயரும் இத்தொகை 10 வருடங்களில் தேங்காய் உற்பத்தியைக் கொடுக்கும் பொழுது அக்கால கட்டத்தில் மககள் பெருக்கத்துககு ஈடு கொடுக்ககூடியதாக தேங்காய் உற்பத்திப் பெருககம் அமைந்து தன்நிறைவைக் கொடுக்கக் கூடியதாக இருக்கும். ஐந்து வருடங்களில் தன்னிறைவைக காணக்கூடியதாக இருக்கும்

[தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்]

---

மருத்துவம்

## தலைவலி ஒரு நோய்க்கான முன் அறிகுறி

தலைவலியும் காச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியுமென்பார்கள்.

வலி சாதாரணமானதாக இருக்கலாம். ஆனால் அதற்கான காரணமதான் இங்கு முக்கிய ஆய்வுக்குரிய விடயமாகவுள்ளது.

மூளை நரம்பியல் சிகிச்சைத் துறையைப் பொறுத்தவரையில் தலைவலி ஒரு நோய்க்கான முக்கிய வெளிப்படையான அறிகுறியாகவே கருதப்படுகின்றது. பெரும்பாலும் அது ஒரு நோயாக அங்கு கருதப்படுவதில்லை.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எம்மில் பலர் வருடக்கணக்கான தொடர் தலைவலியின் தாக்கத்துக்கு உட்படுபவர்களாக இருக்கின்றோம். சிலர் அவ்வப்போது தலைவலியினால் பாதிக்கப்படுபவர்களாக இருக்கின்றார்கள்.

சாதாரண தலைவலிதானே ஒரு பனடோலைப் பருகினால் அது பறந்துவிடுமென்கிறார்கள் இங்குள்ளோர்.

ஆனால் தெற்கைப் பொறுத்தவரையில் தலைவலி என்றவுடன் வைத்திய நிபுணரைச் சந்தித்து பரிசோதனைகளை மேற்கொண்டு, அதற்கான காரணம், சிகிச்சையினை அடையும் வரை அவர்கள் ஓய்ந்து விடுவதில்லை.

தலைவலியின் உள் விளைவுகளை சற்று அறிந்தவர்களாக அவர்களை நாம் காண்கின்றோம்.

தலைவலியும் அதனுடன் இணைந்து வரும் பிற நோய்க்கான அறிகுறிகளும், (காய்ச்சல், வாந்தி, கழுத்துப்பிடிப்பு, கண் வீங்கி வெளித்தள்ளல், தள்ளாடுதல். போன்றவை] கதிர்களைக் கொண்டுள்ளது,

மூளை அதன் அமைப்பைப் பொறுத்து பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதையும், அவை ஒவ்வொன்றும் மனிதனின் ஒவ்வொரு செயற்பாட்டுடனும் தொடர்புடையன என்பதையும் நாம் அறிந்திருக்கின்றோம்.

மூளையின் இப்பகுதிகள் ஒவ்வொன்றிலிருந்தும் வெளிப்படும் காந்த அலைகள் பிரித்தறியக்கூடிய வகையில் வித்தியாசமான அலை வடிவங்களைக் கொண்டவையாக உள்ளன.

ஒருவரது மூளையின் ஏதாவது ஒரு பகுதி பாதிக்கப்பட்டிருந்தால்அதிலிருந்துவெளிப்படும் மின்னலை அதன் சாதாரண வடிவத்திலிருந்து மாற்றமடைந்ததாகக காணப்படும்,

இவ்வலை வடிவ மாற்றத்தை அவதானிப்பதன் மூலம் ஒருவரின் மூளையின் எப்பகுதி பாதிக்கப்பட்டுள்ளது என்பதையும், அதன் காரணமாக மனிதனது உடலின் எப்பகுதி அல்லது எச்செயல் பாதிக்கப்

**கி. மடொன் எல்விஸ்**

தலைவலி ஒருவருக்கு காணப்படும் நேரமும் [முக்கியமாக அதிகாலையிலோ மாலையிலோ போன்றது ]பல நோய்களைக் கண்டறிவதற்கு மூளை நரம்பியல்துறை நிபுணர்களுக்கு பெரிதும் உதவுகின்றன.

தொடர் தலைவலிக்காக வைத்திய நிபுணரைச் சந்திக்கும் ஒருவர் அதற்கான காரணத்தைக் கண்டுபிடிப்பதற்காக மூளை மின்னலைப் பரிசோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

மனித உடலில் சகல ாகுதிகளும் மின்னலைக் காந்தக் கதிர்களின் செயற்பாட்டைக் கொண்டவையாக உள்ளன.

அதிலும் குறிப்பாக மூளை மிக நுண்ணிய மின்னலைக் பட்டுள்ளது அல்லது பாதிக்கப்படப்போகின்றது என்பதையும் மூளை நரம்பியல்த் துறையினரால் இலகுவில் இனங்காணவும், அதனை நிவர்த்திக்கவும் முடிகின்றது.

இந்த மிகநுண்ணிய மூளை மின்னலைகளைப் பெருப்பித்துப் பதிவு செய்வதற்கு ஒரு விசேடமான இயந்திரம் வைத்தியத்துறையினரால் பயன்படுத்தப்படுகின்றது.

மூளைமின்னலைப் பதிவுத்துறை [Electro Encephalo graph] என இது அழைக்கப்படுகின்றது. இதனை சுருக்கமாக ஈ. ஈ. ஜி. [E. E. G.] என அழைப்பர்.

யாழ. போதனு வைத்திய சாலையிலும் இவ்வசதிமுன்னர் இருந்தது. ஆனல் இத்துறையில் தேர்ச்சிபெற்ற மூளை மின்னலை தொழில் நுட்ப உத்தியோகஸ்தர் இன்மையினால் இப்பிரிவு இங்கு கடந்தநான்கு வருட காலத்துக்கும் மேலாக செயலிழந்த நிலையிலுள்ளது.

இந்த மூளை மின்னலைக் கதிர்களின் செயற்பாடு ஈ. ஈ. ஜி. இயந்திரத்தின் மூலம், கம்பியூட்டர் தாளை ஒத்த ஒரு தொடரான விசேட தாளில் அல்லது கம்பியூட்டர் 'டிஸ்க்களில்' [நவீன இயந்திரங்களில்] அலை வடிவில் பதிவாககப்படுகின்றன.

ஒருவரது தலையில் குறிப்பிட்ட 18இடங்களில் பொருத்தப்படும் 'இலற்ரோட்' எனப்படும் கருவிகள் மூளையின் மின்னலை நடமாட்டத்தைப் பெற்று பின்னர் அவற்றை பெருப்பித்துஇறுதியில்தாளில் பதிவு செய்கின்றன.

மூளை மின்னலையை பதியும் போதோ அல்லது பதிவுசெய்யப்பட்ட மின்னலையை மூளை நரம்பியல்த்துறையைச் சேர்ந்த வைத்திய நிபுணரோ அன்றேல் மூளை முன்னலைப் பதிவு தொழில் நுட்ப உத்தியோகத்தரோ வாசிககும்போதோ அவரால் விடக்கூடிய சிறுதவறுகூட நோயாளிக்கு பெரிய பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைந்து விடுகின்றது.

இதனல் மூளை மின்னலைப் பதிவில் ஈடுபடும் தொழில் நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் முதலில் அத்துறை பற்றிய பல விடயங்களில் கடுமையான நுணுக்கமான பயிற்சிக்கு உள்ளாககப்படுகிறார்.

---

## இலங்கை

(9ம் பககத் தொடர்ச்சி)

1979-ம் ஆண்டுக் காலப் பகுதியில் தமிழர்கள் பெரும்பான்மை இன மக்களுடன் சேர்ந்து வாழ இயலாது என்பதை பிரதிபலிக்கக்கூடியதாக 'லங்காராணி' வெளிவந்தது இந்தக் கருத்தைப் பிரதிபலிப்பதாக மலையகத்தில் திரு. ஞானசேகரனின் 'குருதிமலை' நாவல் வெளியாகியது. 1981ல் யாழ். நூலகம் எரிக்கப்படுகிறது.

1981-ம், 82-ம் ஆண்டுக் காலப்பகுதியில் யேசுராசாவின் கவிதை வெளிவருகிறது. நாங்கள் அடக்கப்படுகிறோம், ஒடுக்கப்படுகிறோம். எங்களுக்கு விடுதலை வேண்டும் என்கிற உணர்வில் ஏராளம் கவிதைகள் வெளிவருகின்றன. இந்த மண் தேவை என்ற கருத்தில் பல்கலைக்கழக மட்டத்திலும் பல படைப்புக்கள் வெளிவந்தன.

1987ல் 'மரணத்தில வாழ்வோம்' என்ற கவிதை தொகுதி வெளிவருகிறது. 1989-ம் ஆண்டளவில் ரஞ்சகுமாரின் கதைகள் போராட்ட உணர்வுகளை மையமாக வைத்து பல கதைகள் ஆக்கப்படுகின்றன.

[விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக்கழக இலக்கிய ஆய்வரங்கில் நிகழ்த்திய உரையின் சுருக்கம்.

---

நாட்டின் வரலாறு

## அயர்லாந்து குடியரசு

எல்லை: வடக்கில் ஐக்கிய இராச்சியம் [வட அயர்லாந்து] கிழக்கு, தெற்கு, மேற்கில் வட அத்திலாந்திக் சமுத்திரம்.

பரப்பு: 70,283 சதுர கிலோமீட்டர்.

தலைவர்: பிரதமர்.

தலைநகர்: டப்ளின்

உத்தியோகபூர்வ மொழி: ஐரின் ஆங்கிலம்.

மக்கள் ஐரிஸ் 94%

உத்மதம்: றோ. க.

பிறமதம்: றோ. க. 94%
புரட்டஸ்தாந்து 1%
அங்கிலிக்கன் 4%

நாணயம்: Punt (பன்ட்)

சனத்தொகை: 3700,000 1990ல்

கல்வி: 99·5%

படை: 12,900 1991ல்

உற்பத்தி: உருளைக் கிழங்கு, கோதுமை, சீனி, இறைச்சி, புகையிலை, மரம், கடதாசி, புடவை.

அமைப்பு: மலைகளையும் ஆறுகளையும் உடைய இத்தீவு அத்திலாந்திக் முத்திரத்தில் அமைந்துள்ளது.

### வரலாறு:

கி. பி. 433ல் அயர்லாந்து கிறிஸ்தவ மதத்தைத் சமுவிக் கொண்டது. 12-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பாப்பரசர் அயர்லாந்தை பிரித்தானியாவுக்கு வழங்கினர். 17-ம் நூற்றாண்டு வரை அயர்லாந்து பிரித்தானியாவின் கட்டுப்பாட்டிலிருந்தது. 1800ல் இங்கிலாந்து அயர்லாந்து என்பன பிரித்தானியாவுடன் இணைந்து ஐக்கிய இராச்சியம் உருவாக்கியது. 1919ல் ஐரிஷ் தீவிரவாதிகள் கெரில்லாப்போரை ஆரம்பித்தனர். 17-4-1949ல் அயர்லாந்து குடியரசுப் பிரகடனம் செய்யப்பட்டது. இன்றும் கெரில்லாப் போர் தொடர்கின்றது.

**ந. பரமேஸ்வரன்**

---

## ஆக்கங்கள் தேவை

தரமான இலக்கிய, அரசியல் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், சிறுவர், மாதர் அரங்குக்கான விடயங்கள் வரவேற்கப்படுகின்றன.

'பல்சுவை பகுதிக்கு' சிறுசிறு தகவல்கள் கருத்துள்ள துணுக்குகள் வரவேற்கப்படுகின்றன.

'ஈழநாடு'
த. பெட்டி- 49
யாழ்ப்பாணம்.

# இராணுவ ஆக்கிரமிப்பு நகரம் போல் மட்டக்களப்பு காட்சியளிக்கிறது - பி. பி. ஸி. தகவல்

(லண்டன்)

இராணுவத்தின் ஆக்கிரமிப்பிற்குள் இருக்கும் ஓர் நகரம் போல் மட்டக்களப்பு தோற்றமளிக்கிறது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த சந்திகளில் இராணுவத்தின் பலமான காட்பரணைகள் இருக்கின்றன இவ்வாறு அண்மையில் மட்டக்களப்புக்கு சென்று வந்த பி. பி. ஸி. முகவர் ஜோர்ஜ் ஆர்னி தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு நிலைமை தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: இராணுவ வண்டிகள் வீதிகளில் ஓடிக் கொண்டிருக்கின்றன. நடந்து செல்லும் மக்கள் அவ்வப்போது முகமூடி அணிந்தவர்களுக்கு முன்னால் நடந்து செல்ல உத்தரவிடப்படுகின்றனர்.

பாதுகாப்பு படைகள் எகிறிக் குதிக்கும் மனோ நிலையிலுள்ளன. இந்த ஆண்டில் ஏற்பட்ட மோதல் தவிர்ப்பு உடன்பாட்டின் போது புலிப் படையினர் 5 ஆண்டுகளில முதன் முதலாக மட்டக்களப்புக்கு வந்தனர். பகைமை மீண்டும் தொடங்கியதும் அவர்கள் காடுகளுக்குத் திரும்பி அங்கிருந்து கடுமையான பல தாக்குதல்களைத் தொடுத்தார்கள்.

பாதுகாப்புப் படையினர் தற்போது இப்பகுதியை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முயன்று வருகின்றனர். ஆனால் அடிக்கடி நடுவில் அகப்பட்டுக் கொள்வது பொதுமக்கள்தான். பல பெண்கள் நிலக் கண்ணியில் மிதித்து மட்டக்களப்பு மருத்துவமனையில் கால்கள் வெட்டி எடுக்கவேண்டிய நிலையிலுள்ளனர்.

நிலக் கண்ணிகளை கண்டு பிடிக்கும் மனிதக் கருவிகளாக இராணுவத்தினர் தம்மை பலாத்காரமாக பயன்படுத்தியதாக பொதுமக்கள் கூறினார்கள்.

போராளிகளின் தாக்குதல்களிலிருந்து தப்புவதற்காக இராணுவத்தினர் மட்டக்களப்பு மக்களை வீதிகள் மற்றும் புகையிரதப்பாதைகளில் நீளத்திற்கு நிறுத்தி வைத்துள்ளனர். போர் மீளவும் தொடங்கியதிலிருந்து மட்டக்களப்பில் 2000 மக்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சிலர் மிகக் கடுமையான சித்திரவதையின் பின்னரேயே விடுதலை செய்யப்படுகின்றனர்

ரி-கி-சி

# இராசி பலன்

18-06-1995
ஞாயிற்றுக்கிழமை
[தமிழுக்கு ஆனி 04]

ஷஷ்டி முன்னிரவு 10-22 வரை, அவிட்டம். மரண யோகம் முற்பகல் 7-26 வரை இராகுகாலம் மாலை 4 23 முதல் 5-53 வரை. சுபவேளை காலை 8 53 முதல் 10-53 வரை.

மேடம்- பொறுப்புள்ள தொரு பணி, நல்ல தகவல், பணவரவு

இடபம்- கடும் உழைப்பு, தொழில் சிறப்பு, தெய்வசிந்தனை.

மிதுனம்- முயற்சி தாமதம், வீண்விரயம், மனச்சுமை

கடகம்- மறைமுக எதிரி, கடும் வாதம், அலைச்சல்.

சிங்கம்- பெண்நன்மை, புது முயற்சி, குடும்ப சுகம்.

கன்னி- பெரியோர் ஆசி, பொதுப்பணி, தாயார் உதவி.

துலாம்- தொழில் நஷ்டம், குடும்ப விவகாரம், வெறுப்பு.

விருச்சிகம்- பயணக்கஷ்டம், இனசனபகை, அவமதிப்பு.

தனுசு- தொழில் உறவு, சகோதரபாசம், புரட்சியான சிந்தனை.

மகரம்- தலைகுனிவு, காரிய தாமதம், உள்ளக்குமுறல்.

கும்பம்- மேலதிகாரிகள் மதிப்பு, சகிப்புத்தன்மை, பணவரவு.

மீனம்- தொழில் பதற்றம், கவனக்குறைவு, குடும்பச் சச்சரவு.

— ஜோஸ்யர்

# கொழும்பில் நாளாந்தம் தமிழர்கள் 'டசின்கணக்கில்' கைதாகிறார்கள் !

(லண்டன்)

கொழும்பில் தமிழர் வாழும் பகுதிகளில் திடீர் சோதனைகள் நடத்தப்படுகின்றன. சந்தேகத்திற்குரியவர் என்று கருதப்படுபவர்களை நாளாந்தம் டசின் கணக்கில், இழுத்துச்சென்று காவலில் வைக்கிறார்கள் என்று பி பி. ஸி முகவர் ஜோர் ஆர்னி இலங்கையில் தமிழரின் பாதுகாப்பு நிலைமை தொடர்பாக பி. பி. ஸிக்கு தெரிவிக்கையில் கூறினார்.

அவர்மேலும் கூறியதாவது: மத்திய கொழும்பின் முக்கிய சாலையொன்றின் வழியாக நான் என்னுடையமோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தேன். நாடு முழுவதும் பரவலாக அமைக்கப்பட்டுள்ள சோதனைச்சாவடிகளில் ஒன்று இந்தச்சாலையிலும இருக்கிறது.

ஒரு மறைப்பு - இராணுவ உடை பச்சை நிற தொப்பி அணிந்து கொண்டிருக்கும் 6, 7 இராணுவத்தினர் தானியங்கித் துப்பாக்கிகளை ஏந்திய வண்ணம் அங்கிருக்கிறார்கள். அவர்கள் முன்னரே பெரிய பேருந்து ஒன்றை தடுத்து நிறுத்தி அதில் பயணம் செய்த 40 முதல் 50 பயணிகளை பாதுகாப்புச் சோதனைக்காக கீழே இழுத்து நிறுத்தியுள்ளார்கள். மீண்டும் மற்றுமொரு கார் நிறுத்தப்பட்டு அதனுள் இருக்கும் இரு நடுவயதினர் வெளியே வந்து தமது காரின் முன்பக்க மூடுகதவை திறந்து காட்டினார்கள். காரின் பிற்பகுதியை அதாவது பூட்டையும் இராணுவத்தினர் முற்றிலும் சோதனை செய்தார்கள்.

இவை போன்ற காட்சிகள் தற்போது கொழும்பில் சர்வ சாதாரணம். முன்னெப்போதும் இராத அளவுக்கு பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

ரி-சி

## ஈராக்-இஸ்ரேல்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இஸ்ரேலியர்கள் இப்படி அத்துமீறி நடந்துகொண்டதையும், அவர்களின் ஆக்கிரமிப்பு எப்படியானது என்பதையும் எகிப்திய முன்னாள் ஜனாதிபதி நாஸர் ஒரு கட்டத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

இஸ்ரேலியர்களை கடலில் தூக்கி வீசுமாறு அரபு நாடுகளைக் கோரியது பொருத்தமற்றது. கடலில் வீசினால் அவர்கள் தாங்கள் கரை சேருகிற இடத்தில் ஒரு நாட்டை அபகரித்துக்கொள்வார்கள் என்றார்.

சிறிமா அரசாங்க காலத்தில் இருந்து விரட்டியடிக்கப்பட்ட இஸ்ரேல், அதே சிறிமா பிரதம மந்திரியாக அலங்கரிக்கும் இன்றைய ஆட்சியில் இராஜதந்திரத் தொடர்புகளையும், அலுவலகத்தையும் வடக்கு-கிழக்கு யுத்தத்தைக் காரணமாக வைத்து இலங்கையில் காலூன்றநினைப்பதும் ஒரு ஆக்கிரமிப்பின் வெளிப்பாடு என்றும் கூறாமலிருக்க முடியாது.

1991-ம் ஆண்டு இடம் பெற்ற வளைகுடாப் போரில், குவைத்துக்காக இஸ்ரேல் 39 ஏவாயுததடுப்புக்கணைகளை ஈராக்குக்கு எதிராக பாவித்து அதன் வெற்றியைத் தடுத்துள்ளது.

இதே பாணியில் இலங்கைக்கும் இராணுவ உதவிகளைக் கொடுத்து தமிழர்களின் நியாயமான போராட்டத்தை நசுக்கிவிடலாம் என்று நினைக்கலாம். ஆனால் இலங்கை இராணுவ அதிகாரிகள் குறிப்பிட்டது போன்று ''போருக்கு முன்னே செல்வது படையினர் தான். திட்டங்கள் வகுக்கும் வெளிநாட்டு ஆலோசகர்கள் அல்ல என்று அரசாங்கத்தையும் இராணுவத்தையும் எச்சரித்திருப்பதும் இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது.

இஸ்ரேல் ஈழ மக்களுக்கு ஒரு எதிரியாக தென்படுகிறது. இஸ்ரேல் தமிழ் மக்களுக்கும் ஒரு எதிரியாக தென்படுவதற்கு முன்பு, உலகத்தில் நாடில்லாது அலைந்து ஒரு நாட்டை உருவாக்கியவர்கள் என்பதை மறக்கக் கூடாது.

## பருத்தித்துறை இல. வங்கி இடமாற்றம்

(நெல்லியடி)

பருத்தித்துறை இலங்கை வங்கி, பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை வளவிலுள்ள, மாவட்ட வைத்திய அதிகாரியின் விடுதிக்கு மாற்றப்படவுள்ளது.

இதுசம்பந்தமாக, யாழ். தலைமை அலுவலகத்துடன் பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் தொடர்பு கொண்டிருப்பதாக தெரிய வருகின்றது. 160

## நூல் வெளியீடு

(கொழும்புத்துறை)

யாழ். கல்வித்திணைக்களம் யாழ். வலயம் இரண்டின் ஆரம்பக்கல்வித்திறன் விருத்திச் செயற்திட்ட நூல் அண்மையில் யாழ். மானிப்பாய் இந்துக் கல்லூரியில் வெளியிட்டு வைக்கப் பட்டது. 154

# அரசியல் தீர்வை முன்வைக்கும் முன் சகல கட்சிகளுடனும் பேசப்படும்! - அமைச்சர் பீரிஸ்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பிரச்னைக்கு அரசியல் தீர்வை முன்வைக்கு முன்னர் சகல அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடாத்தப்படும் என நீதி மற்றும் அரசியல் யாப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்கள் பற்றி நேற்று முன்தினம் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இது சம்பந்தமாக ஏற்கனவே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் கலந்துரையாடியதாகவும் தெரிவித்தார்.

பொதுசன ஐக்கியமுன்னணி மற்றும் இதர கட்சிகளுடனும் கலந்தாலோசித்து அரசாங்கத்தின் ஆலோசனைகள் நாடாளுமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்படும்.

இதன்போது பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு நடாத்தி அவற்றை அங்கீகரிக்கநடவடிக்கைமேற்கொள்ளப்படும்.

தற்போதைய யுத்த சூழல் மற்றும் நடவடிக்கையை முன்னிட்டு இந் நடவடிக்கை இன்னும் 2 அல்லது 3 மாதங்கள் தாமதமடையலாம் என்றும் தெரிவித்தார்.

க-ரி-சி

புதிய அரசியலமைப்பில்

# ஜனாதிபதியின் அதிகாரங்கள் எதுவும் குறைக்கப்படமாட்டாது!

(கொழும்பு)

ஜனாதிபதிக்கு தற்போதுள்ள அதிகாரங்கள் புதிதாக வரையப்படவுள்ள அரசியல் யாப்பில் குறைக்கப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி புதிய அரசியல் யாப்பில் ஜனாதிபதிக்கு முன்பிருந்த அதிகாரங்கள் தொடர்ந்தும் பாதுகாக்கப் படவுள்ளது.

இப்புதிய திருத்தத்தில் ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் நடைமுறையில் மட்டுமே மாற்றம் கொண்டுவரப்படவுள்ளது, அவரின் அதிகாரங்கள் எதிலும் மாற்றம்செய்யப்படமாட்டாது.

புதிய அரசியலமைப்புப்படி இனிமேல் ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் அதிகாரம் பிரதம மந்திரிக்கு வழங்கப்படவுள்ளது.

ஜனாதிபதி ஆட்சிமுறையில் மாற்றம் கொண்டுவரப்போவதாகவும் ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களைக் குறைக்கப் போவதாகவும் தேர்தல்காலங்களில் கூறிவந்த ஜனாதிபதி சந்திரிகா. இதன்மூலம் தனது வாக்குறுதிகளை வெறும் கேலிக்கூத்தாக்கியுள்ளதுடன் மக்களும், ஏனைய அரசியல் கட்சிகளும் ஏமாற்றப்பட்டுள்ளனர் என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். [கி-சி]


## தட்டச்சுப் பயிற்சி

(தமிழ் / ஆங்கிலம்)

ஆரம்பம்: 01 - 07 -1995
விண்ணப்பமுடிவு திகதி: 23 - 06 - 1995

மேலதிக விபரங்களையும், விண்ணப்பப் படிவத்தினையும் வாரநாட்களில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

வடமராட்சி
சுருக்கெழுத்துக் கழகம்
வதிரி, கரவெட்டி.
(சி-1522)


## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

18-06-1995
ஞாயிறு இரவு

8-02 இசையரங்கம் - எஸ். பத்மலிங்கம் அவர்கள் பாடுவார்கள்
8-30 செய்திகள்
8 40 தொடர்நாடகம்-கருணை ரவி எழுதும் ''காணி நிலம் வேண்டும்'' அங்கம் 14

19-06-1995
திங்கள் காலை

7-02 மாவீரவணக்கம்
7-15 நீங்கள் கேட்டவை
7-30 செய்தி
7-35 பத்திரிகைச்செய்திகள்
7-45 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

18-06-1995
ஞாயிறு மாலை

5-01 சிந்தனைச் சிதறல்
5-02 எழுச்சி கீதம்
5-10 புதியவை
5-15 மழலைகளுக்காக
5-30 கதம்பம்
6-00 சிந்தனைக்குச் சிலவினாடிகள்
6-02 உங்கள் தெரிவு
6-30 மாலைநிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

## சர்வதேச

(3ம் பக்கத் தொடர்ச்சி)

காலமாக சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் முறுகல்நிலை இருந்து வருகின்றது.

★ கிறீஸ் நாட்டில் ஏற்பட்ட நில நடுக்கத்தில் 56 பேர் பலியாகியுள்ளனர். பலர் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

★ ரஷ்யாவில் 1500 பேரை கடத்தி ஒரு ஆஸ்பத்திரி ஒன்றில் பணயம் வைத்துள்ளார்கள். இதில் 40க்கு மேற்பட்டோர் பலியாகியுள்ளனர், இது செச்னியா போராளிகள் வேலையாக இருக்கலாம் என்று ரஷ்யா இவர்களை விடுவிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

நல்லூர் கிளைநூலகம்.

★ இனப்பிரச்னை தீர்வுக்கு

# படைபலம் பிரயோகிக்கப்படுவதை ஜெர்மன் அரசு எதிர்க்கின்றது

(கொழும்பு)

அரசியல் தேவைகளை அடைவதற்கு படைபலம் பிரயோகிக்கப்படுவதை ஜெர்மன் அரசாங்கம் எதிர்க்கின்றது என்று தற்போது இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஜெர்மன வெளிவிவகார குழுவின் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசாங்கம் சமாதான முயற்சிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமென்று ஜெர்மனி வலியுறுத்துவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்

தற்போது மனித உரிமைகள் நிலைமை முன்னேற்றம் கண்டுவருவதால் ஜெர்மனியில் உள்ள இலங்கையர்களுக்கு அடைக்கலம் கொடுக்கவேண்டிய அவசியம் இடையாது என்றும் அவர்கள் கூறினர்கள்

இதேவேளை தற்போது ஜெர்மனியில் தங்கியுள்ள வெளிநாட்டமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்காமரை ஜெர்மன் வெளிநாட்டமைச்சர் சந்தித்து இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாக கலந்துரையாடியுள்ளார்.

இச் சந்திப்பின்போது உள்நாட்டு அரசியல் மோதலுக்கு சமாதான பூர்வ முயற்சிகளை இலங்கை அரசு தொடர்ந்து மேற் கொள்ள வேண்டும் என்று அமைச்சர் கதிர்காமரைக் கேட்டுக் கொண்டார். -ரி

# இலங்கைத் தமிழர் பற்றி தகவல்தர கோரிக்கை

(சென்னை)

இராமநாதபுரம கடற்கரைப்பகுதிகளில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடும் இலங்கைத் தமிழர்கள் பற்றி தகவல் தருமாறு இராமநாதபுரம் மீனவர்கள் பொலிஸாரினால் கேட்கப்பட்டிருக்கிறார்கள்

கடந்த பெப்ரவரி மாதம் சென்னை மத்திய சிறையிலிருந்து தப்பிச் சென்ற விடுதலைப்புலி சந்தேக நபர்கள் ஐவரை மீண்டும் கைதுசெய்யும் முகமாகவே பொலிஸார் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இ-ரி

# ஓய்வு பெறப்போவதாக அன்னை திரேசா அறிவிப்பு

(கல்கத்தா)

இந்தியாவின் மேற்கு வங்காள மாநிலத்தின் கல்கத்தா நகரில் ''ஏழைகளின் சகோதரிகள்'' என்ற சபையை ஆரம்பித்து கடந்த 43 வருடங்களாக பராமரித்து வரும் நோபல் பரிசு பெற்ற அன்னை திரேசா, தான் ஓய்வு பெறப் போவதாக உலக கத்தோலிக்கத் தலைவர் திருத்தந்தை 2 வது அருள் சின்னப்பருக்கு அறிவித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தமது தலைமைப் பதவிக்கு மேற்படி சபையின் மூத்த சகோதரி ஒருவரின் பெயரை தான் மிக விரைவில் வெளியிடுவதாக கூறியுள்ள அன்னை திரேசா, ஏற்கனவே தான் வகித்து வந்த பல முக்கிய பதவிகளை தமது சக சகோதரிகளுக்கு வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. வி-ரி

# சிறிலங்காவில் குடிவரவை விட குடியகல்வே அதிகரித்து வருகிறது

(கொழும்பு)

சிறிலங்காவில் குடிவரவை விட குடியகல்வு அண்மைய மாதங்களில் அதிகரித்துள்ளதாக குடியகல்வு 'வட்டாரச் செய்திகள் தெரிவிக்கின்றன.

உல்லாசப் பயணிகள் வருகை தொடர்ச்சியாக வீழ்ச்சிகண்டு வருவதும், தொழில்தேடி இளைஞர்கள் யுவதிகள் வெளிநாடு செல்வதும் இந்நிலைக்கான முக்கிய காரணமெனக் கூறப்படுகிறது.

முன்னர் எப்போதையும் விட தற்போது வசதி படைத்த சிங்களக் குடும்பங்கள் தமது சொந்த வீடுகளையும் விட்டுவிட்டு வெளிநாடுகளுக்கு செல்வதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை முக்கிய அரச கட்டிடங்களுக்கு அருகாமையில் வசிக்கும் மக்கள் சிலர் அங்கிருந்து வெளியேறி தூர இடங்களுக்கு செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

சிங்கள இளைஞர்களும் யுவதிகளும் வெளிநாட்டு வேலைவாய்ப்பில் அதிகஆர்வம் காட்டி வருவதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா ஆட்சேர்ப்புக்கு சிங்கள இளைஞர் யுவதிகளின் ஆர்வம் வெகுவாக குறைந்து வருவதும் குறிப்பிடத்தக்கது: வி-ரி

# தமிழ் கிராமத்தை தாக்கும் திட்டம் நிறைவேறவில்லை!

(கொழும்பு)

பொலநறுவை மாவட்டத்திலுள்ள தமிழ்க் கிராமம ஒன்றை சிங்களக் காடையர்கள் தாக்குவதற்கு போட்ட திட்டம் அந்தத் தமிழ்க் கிராம வாசிகளின் முன்னெச்சரிக்கையான நடவடிக்கையினால் நிறைவேறாமல் போய்விட்டதாக 'ராவய' தெரிவித்துள்ளது.

திம்புலாகல தேரரின் இறுதிக்கிரியைகளுக்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் திம்புலாகல பகுதிக்கு அண்மையில் அமைந்திருந்த 'சொருவல்' தமிழ்க் கிராமத்தைத் தாக்க சிங்களக் காடையர்கள் திட்டமிட்டிருந்தனர். ஆனால் ஏற்கனவே இது குறித்துக் கிடைத்த தகவலையடுத்து அக்கிராம தமிழ் மக்கள் கிராமத்தைவிட்டு வெளியேறி அருகிலிருந்த காட்டுப் பகுதிக்குள் சென்று தமக்குப் பாதுகாப்பு தேடிக்கொண்டதனால் காடையர்களின் திட்டம் நிறைவேறாமல் போய்விட்டதாக 'ராவய' தெரிவித்துள்ளது, -கி-ரி

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகிழக்கு உதைபந்தாட்டச் சங்கம் நடத்தும் விளையாட்டுக் கழகங்களிடையே, நாவாந்துறை சென் நீக்கலஸ் கழக மைதானத்தில் நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டியின் இன்றைய ஆட்டங்களின் விபரம் வருமாறு:

முதலாமாட்டத்தில் சென். அன்ரனிஸ் எதிர் எவறெஸ்ட், இரண்டாவது ஆட்டத்தில கொய்யாத்தோட்டம் எதிர் சென்மைக்கலஸ், மூன்றுவது ஆட்டத்தில் சென். நீக்கலஸ் எதிர் ஆனைக்கோட்டை யூனியன்.

காங்கேசன்துறையங்ரேயல் விளையாட்டுக் கழகம் உரும்பராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடாத்தும் 9 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இன்றைய ஆட்டங்கள் வருமாறு:

பாசையூர் சென் அன்ரனீஸ் எதிர் அளவெட்டி யுக், நாவாந்துறை சென் மேரீஸ் எதிர் அரியாலை ஐ. வி. எதிர் ஆனைக்கோட்டை அறிவொளி வெற்றிபெற்ற அணி மோதும். -சி-ரி

## லங்கா முடித்த வருகிறது

(நெல்லியடி)

கொழும்பிலிருந்து உணவுப் பொருட்களை ஏற்றிய 'லங்கா முடித்த' கப்பல் இன்று காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும்.

இதேவேளை அங்கு வேறு பல பொருட்களை ஏற்றிமுடித்த குமண கப்பலும் நாளை திங்கட்கிழமை இங்கு வந்து சேருமெனத் தெரியவருகின்றது. (160-ரி)

## திரியாய்

(1ம் பக்கத் தொடர்ச்சி

காட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும இராணுவத்துக்கும இடையில் இடம்பெற்ற மோதலில் லெப். கேணல் தரத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் உட்பட இரு அதிகாரிகளும் ஐந்து இராணுவத்தினரும் கொல்லப்பட்டதுடன் 35க்கும் அதிகமான படையினர் காயமடைந்தது குறிப்பிடத்தக்கது. (கி-ரி)

## இன்று

(யாழ்ப்பாணம்)

மந்துவில் வாளையடி பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேக வைபவம் இன்று 18ம் திகதி காலை 6மணிக்கு இடம்பெறும். ம

# புலிகளுடனான யுத்தத்தில் நாம் வெற்றியீட்டுவதற்கு சான்று இல்லை

## சிங்கள விமர்சகர் கருத்து

(கொழும்பு)

ஒற்றையாட்சியில் இறுதிக் கட்டத்தை நாம நெருங்கிவிட்டோம் என அட்மியன் விஜேமான என்ற சிங்களப்பத்திரிகை விமர்சகர் தனது கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு செலவுக்குப் பெருந்தொகைப் பணம் ஒதுக்கப்படுவது நாட்டுக்கு நலலதல்லவெனக் கூறும் அவர் விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் நாம் வெற்றியீட்டுவோம் என்பதற்கு எவ்வித சான்றும் இல்லையெனக் கூறியுள்ளார்.

மேலும் அவர் தனது கட்டுரையில் எந்த ஒரு படையினாலும் அழிக்க முடியாத நாட்டின் நிரந்தர படை ஒன்றின் தோற்றத்தை விடுதலைப் புலிகள் வான்பிரிவு அடைவது உறுதி. இன்றைய உண்மை நிலையை அறிந்து அதற்கு அமைய உண்மையான சமாதானத்துடன் முயற்சிகள் எடுக்கவேண்டிய சந்தர்ப்பம் நெருங்கிவிட்டது அப்படி இல்லையென்றால் 21-ம் நூற்றாண்டிலும் இது தங்கள் தேசம் என்ற மாயையிலிருந்து சிங்க மக்கள் விடுபட்டு முன்னேறமாட்டார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். -ரி

## சர்வதேச

(1-ம் பக்கத் தொடர்ச்சி

நெருங்கிய ஒத்துழைப்பு ஏற்படவேண்டும்.

இலங்கைக்கும் ஐரோப்பிய யூனியனுக்குமிடையே பொருளாதார ஒத்துழைப்புக்கான உடன்படிக்கையொன்று உள்ளது. பல விடயங்கள்குறித்து இநத உடன்படிக்கையில் விதிகள் உள்ளது.

பயங்கரவாதத்தை ஒழித்தல் முழு சர்வதேச சமூகத்தினதும் முக்கிய கவனததை பெற்றுள்ளது. எனவே ஐரோப்பாவில் புலிகளுக்கு கிடைக்கும் பணம் அவர்களுக்கு ஆயுதங்கள் வாங்குவதற்கும் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கு இலங்கை ஒத்துழைப்பை நாடியுள்ளது.

புலிகளை ஒரு வழிக்கு கொண்டு வரும் முகமாகவும் இராணுவ தாக்குதல் நடாத்தப்பட வேண்டும். பாதுகாப்பு நிலைமை குறித்து, குறிப்பாக ஏவுகணைகள் பயன்படுத்தப் பட்டமை குறித்து இந்தியா பெரிதும் கவலை கொண்டுள்ளது. இருநாடுகளினதும் பரஸ்பர பாதுகாபபு நலன்கள் ஒரே மையத்தை நோக்கியதாக அமைந்துள்ளன இந்தியா ஒத்துழைப்பு நல்கும் என நம்புகிறோம்.

புலிக்ள் தலைவர் பிரபாகரனை ஒப்படைக்குமாறு இந்தியா விடுத்த வேண்டுகோள், குற்றவாளிகளை ஒப்படைக்கும் இலங்கைச் சட்டத்தின்கீழ் சட்ட ரீதியில் தற்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இந்த விவகாரம் காலகெதியில் பரிசீலனை செய்யப்பட்டு சட்டப்படி பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும்.

இராணுவத்திற்கு பின்னடைவுகள் ஏற்பட்டதாக கூறப்படுவது தவறு. ஏப்ரல் 19ம் திகதி சண்டை ஆரம்பித்த பின்னர் பாரதூரமான இராணுவ பின்னடைவுகள் எதுவும் ஏற்பட்டதாக நான் கருதவில்லை, படையினரின் உயிரிழப்பு மற்றும் இரு சப்பல்கள் இரு விமானங்கள் இழக்கப்பட்ட போதும் சண்டை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இராணுவம் ஏற்கனவே வெற்றியடைந்துள்ளது.

அடுத்த சில மாதங்களில் மேலும் இராணுவ வெற்றிகள் கிடைக்குமென நாம் கருதுகிறோம் எனவும் அவர் தெரிவித்தார், (சி-ரி)

தேசிய விளையாட்டு விழா

# யாழ். பாடசாலைகள் பங்குபற்றமாட்டா

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் எதிர்வரும் 22 ம் திகதி நடைபெறவுள்ள அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழாவில் யாழ் மாவட்டப் பாடசாலைகள் கலந்துகொள்ளமாட்டா.

இதேபோன்று கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளும் தேசிய விளையாட்டு விழாவில் கலந்து கொள்ளாதெனத் தெரியவருகின்றது.

கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள இவ் விளையாட்டு விழாவில் நாடு முழுவதிலுமிருந்து ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். கி-சி

## மட்டக்களப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி

ஜீவன் (கிருஷ்ணபிள்ளை ஜீவராசா மட்டக்களப்பு) 2ம் லெப் அமலன் (தம்பிப்பிள்ளை ரவீந்திரகுமாரன் மட்டக்களப்பு), 2ம் லெப். லோகேஷ் (கணபதிப்பிள்ளை சிறீதரன், அம்பாறை) ஆகிய போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துள்ளனர். (ரி)

## தமிழர்களை

(1-ம பக்கத் தொடர்ச்சி)

பௌத்தம் படிக்க விரும்பும் தமிழ்ச்சிறுவர்களைக் குறித்த முகவரியிலுள்ள பௌத்த பிக்குவுடன் தொடர்புகொள்ளுமாறு நேற்றைய 'ஆயுபோவன்' நிகழ்ச்சியில்தெரிவிக்கப்பட்டது. (கி-ரி)

எறிகணை பக்கத்திலே விழுந்தாலும்
செவிடன் -
சிரித்தபடி இருப்பான்!
இரகசிய மூச்சை மட்டும்
உள்வாங்கும் அவனது செவி!!
உணருங்கள்!
உற்றுப் பாருங்கள்!

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஜூன் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683613.